விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 26
ஒலி 192 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 15 ஞாயிற்றுக்கிழமை (29.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பலாலி அம்மனை வழிபட இராணுவம் மீண்டும் தடை



முட்கம்பிவேலிக்கு முன்பாக கற்பூரம் கொளுத்தி வழிபட்ட மக்கள்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு 35 வருடங்களின் பின்னர், கட்டுப்பாடுகள் இன்றி வழிபட நேற்று முன் 23ஆம் பக்கம் பார்க்க

## மேலும் 3 எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று சனிக்கிழமை மேலும் மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண் 23ஆம் பக்கம் பார்க்க



### சுயாதீனமான கட்டமைப்பில்

# வெளிவிவகார அமைச்சின் தலையீடு எதற்கானது

## சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி

AMNESTY INTERNATIONAL

(கொழும்பு)

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் ஒரு சுயாதீன கட்டமைப்பு. எனினும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருடனான சந்திப்பில் வெளிவிவகார அமைச்சு எதற்கு தலையீடு செய்தது என சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி எழுப்பியுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

### விசேட பாராளுமன்ற அமர்வு நாளை

#### ஜனாதிபதி அநுர உரையாற்றுவார்

(கொழும்பு)

நாளை திங்கட்கிழமை (30) விசேட பாராளுமன்ற அமர்வொன்று நடைபெற 23ஆம் பக்கம் பார்க்க

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரியில்
நாளை 30.06.2025
திங்கட்கிழமை தொடக்கம்
சொக்கன் எழுதும்
மொசாட்

தொடர் வெளிவரும்
வாசிக்கத் தவறாதீர்கள்

## செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி லண்டனில் போராட்டம்



(லண்டன்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் தமிழீழ சுயநிர்ணய அமைப்பு மற்றும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் இணைந்து ஐக்கிய இராச்சியத்தில் போராட்டமொன்றை முன்னெடுத் 04ஆம் பக்கம் பார்க்க

### வடமராட்சி கிழக்கில்

## காணாமல்போன மீனவரின் சடலம் நேற்று கரையொதுங்கியது

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் கடற்தொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போன கடற்தொழிலாளி சடலமாக நேற்று கரையொதுங்கியுள்ளார்.

மணற்காட்டைச் சேர்ந்த அ.ஆனதாஸ் (வயது-38) என்பவரே 23ஆம் பக்கம் பார்க்க



### போதை மாத்திரைகளுடன்

## மட்டுவிலில் இளைஞன் கைது

(சாவகச்சேரி)

மட்டுவில் பகுதியில் போதை மாத்திரைகளுடன் 24 வயதான இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் தவறிவிழுந்த 2 வயதுக் குழந்தை பலி

### புலோலியில் சம்பவம்

(கரணவாய்)

கிணற்றில் தவறிவிழுந்த 2 வயது ஆண் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

பருத்தித்துறை புலோலி கிணற்றடி வைரவர் கோவிலடியில் நேற்று சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த அனுசயன் (வயது - 2) என்ற குழந்தையே உயிரிழந் 23ஆம் பக்கம் பார்க்க

### சட்டவிரோதமாக ஊடுருவ முயன்ற

## முல்லையைச் சேர்ந்த மூவர் தனுஷ்கோடியில் கைது



23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை



உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்.)

**077 138 7596, 071 999 9306**

(4672)

## ஈழ நல்லூர்
## ஸ்ரீதேவி வில்லிசைக்குழு

இயக்குனர் கலைமாமணி, வில்லிசைச் சக்கரவர்த்தி டாக்டர் சாம்பசிவஸ்ரீ சோமாஸ்கந்த குருஜி அவர்கள் கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். உங்கள் ஆலய உற்சவங்கள், கலைவிழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் பல்சுவை நகைச் சுவையுடன் வில்லுப்பாட்டு நிகழ்வுகளைக் காண அழைத்து மகிழுங்கள்.

**13.07.2025 வரை**

தொடர்புகளுக்கு : **075 041 0216**

(4660)

# Rani Farm

எமது பண்ணையில் உற்பத்தி செய்யப்படும்


| | |
|---|---|
| ஊர் கோழி குஞ்சு 1 நாள் | - 160/= |
| விறாத்து குஞ்சுகள் ஒன்று | - 850/= |
| வான்கோழி குஞ்சுகள் 1 நாள் | - 400/= |
| வான்கோழி சேவல் 1Kg | - 1400/= |

1 நாள் ஊர் கோழி குஞ்சுகளை தினமும் பெற்றுக் கொள்ளலாம்.

பண்ணாகம் சுழிபுரம்

**077 33 224 33**

(1273)



## யாழ். நகரில் வேலைவாய்ப்பு

Evergreen Celebration (pvt) LTD நிறுவனத்தில்

- Event Manager
- Decoration Helper
- Decoration Designer
- Sales Man

சம்பளம் - 45000/=

(4666)

**T.P : 077 775 0318**

## காணி விற்பனைக்கு

நாவற்குழி உணவுக் களஞ்சியத்தின் மேற்கு வாசலுக்கு எதிராக அமிர்தா வீதியில் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(பகுதியாகவும் பிரித்து கொடுக்கப்படும்)

விபரங்களுக்கு :
**074 140 0693**

(4667)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## UBER சேவை யாழில்

நீங்கள் உங்கள் வாகனங்களை எம்முடன் இணைத்து மாதம் 200,000/- வருமானம் பெறலாம். விபரங்களுக்கு அழைக்கவும்.

**076 897 2043**
**070 612 3125**

(C-183)

## சமையலாளர்கள் தேவை

கல்வியங்காட்டில் இயங்கும் சைவ, அசைவ உணவகத்திற்கு றொட்டி போடுபவர், சமையல் செய்பவர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு :
**077 929 2093**

(4668)

# மரண அறிவித்தல்

## வேலாயுதம் தர்மகுலசிங்கம் [அப்பன்]
(ஓய்வுபெற்ற ஊழியர் யாழ். பல்கலைக்கழகம்)



தோற்றம் 09.11.1964 மறைவு 26.06.2025

கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தர்மகுலசிங்கம் அவர்கள் 26.06.2025 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் சர்மிளா, காலஞ்சென்ற கம்ஷிகா மற்றும் ராகவன்(லண்டன்), ராகுலன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாளினி(லண்டன்), பௌசிகன் ஆகியோரின் மாமனாரும் தமிழ்இனியன், எழில்நிலன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் தவமணிதேவி, யசோ ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்
[illegible]

(4664)

# மரண அறிவித்தல்

மலர்வு 01 - 02 - 1954



உதிர்வு 24 - 06 - 2025

## மகாலிங்கம் தயாநிதி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் தயாநிதி அவர்கள் கடந்த 24.06.2025 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா செல்வரத்தினம் தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், மகாலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும் தயாரதி (சுவிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் நவரத்தினம் (சுவிஸ்), அகிலாண்டேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான இந்திரராணி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனியாரும், வித்யாழினியின் அன்புத் தாயாரும் யசோதரனின் அன்பு மாமியாரும் கவிஷாவின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 29.06.2025 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

51/1, கேசாவில் பிள்ளையார் வீதி,
[illegible]

தகவல் :
குடும்பத்தினர்
076 663 9323

(C-3291)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைகளுக்கான அமெரிக்க நிதி நிறுத்தப்படுமா?

(வோஷிங்டன்)

**இலங்கை உள்ளிட்ட பல உலக நாடுகளில் இடம்பெற்றதாக கூறப்படும் போர் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறல் பணிகளை மேற்கொள்வதற்கான அமெரிக்காவின் நிதியுதவியை நிறுத்துமாறு வெள்ளை மாளிகை பரிந்துரைத்துள்ளது.**

தகவல் அறிந்த அமெரிக்க வட்டாரங்கள் மற்றும் அரச ஆவணங்களை மேற்கோள் காட்டி சர்வதேச செய்தி நிறுவனமொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இதன்படி, போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறல் பணிகளை மேற்கொள்ளும் 24 திட்டங்களுக்கான நிதியை நிறுத்துமாறு பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையில் உள்ள முகாமைத்துவம் மற்றும் வரவு செலவு அலுவலகம் இந்த பரிந்துரையை வழங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்தித் தகவல்களுக்கு அமைய, இலங்கை, ஈராக், நேபாளம், பெலாரஸ், ஆப்கானிஸ்தான், ரஷ்யா, சிரியா மற்றும் கொலம்பியா போன்ற நாடுகள் அந்த பரிந்துரை பட்டியலில் அடங்குகின்றன.

இருப்பினும் அமெரிக்க வெளிவிவகார துறையினரும், வெள்ளை மாளிகையின் முகாமைத்துவம் மற்றும் வரவு செலவு அலுவலகமும் இது தொடர்பில் பதில் எதனையும் வழங்கவில்லை எனவும் குறித்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் குறித்த திட்டங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இறுதி தீர்மானமாக இதனை கருத முடியாது எனவும், இந்த விடயம் தொடர்பில் வெளி யுறவுத் துறைக்கு மேன் முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## ஜூலை முதல் ஆசனப்பட்டிகள் கட்டாயம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை உட்பட அனைத்து பயணிகள் பேருந்துகளின் சாரதிகளும், எதிர்வரும் ஜூலை 1 ஆம் திகதி முதல் ஆசனப்பட்டிகள் அணிவதை கட்டாயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது

இதனை இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பி.ஏ. சந்திரபால நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

வீதி பாதுகாப்பில் சர்வதேச தரத்தைப் பேணுவதற்கான முயற்சியில் இது முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## இலங்கைக்கான நிதியுதவியை அங்கீகரித்த உலக வங்கி

(வோஷிங்டன்)

இலங்கையின் இலவச கல்வி நவீனமயமாக்கல் திட்டத்துக்கு மேலதிகமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை உலக வங்கி அங்கீகரித்துள்ளது.

இந்த நிதியுதவி நாடு முழுவதும் சுமார் 500,000 மாணவர்கள் மற்றும் 150,000ஆசிரியர்களுக்கு பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கிய கல்வி சீர்திருத்தங்களை மேம்படுத்தவும், கற்பித்தல் தரத்தை மேம்படுத்தவும், பாடசாலை வசதிகளை, மாணவர் நல்வாழ்வை மேம்படுத்தவும் உதவும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

விசேடமாக வசதி குறைந்த கிராமப் புற மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு உதவும் வகையில் இந்த நிதி வழங்கப்படவுள்ளது. (நி)

## அநுராதபுரத்தில் குறைவடைந்த எயிட்ஸ் நோயாளர்கள்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தில் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பாலியல் சுகாதார சேவைகள் மையத்தின் தலைமை மருத்துவ அதிகாரி அஜித் கரவிட இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பதிவான அநுராதபுரத்தில் 21 எயிட்ஸ் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர்.

எனினும் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நான்கு எச்.ஐ.வி தொற்று நோயாளிகள் மட்டுமே பதிவாகியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். எச்.ஐ.வி தொற்றுக்கு ஆளானவர்களில் பெரும்பாலோர் ஆண்கள் என்றும், 2023 முதல் இன்றுவரை அநுராதபுர மாவட்டத்தில் 155 நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (நி)




ராஜ் ஜுவல்லர்ஸ்

நகை அடகுபிடிக்கும் சேவை

வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது

1 பவுண் 22 கரட்டிற்கு

2,20,000/=

அடகுக்காலம் ஒருவருடம்

இல.59, ஆடியபாதம் வீதி,

திருநெல்வேலி சந்தைக்கு அருகில்

021 221 7287 / 076636 1238

(4634)


## சேவைக்காய் தன்னை அர்ப்பணித்தவர் அமரர் திருமதி கவிதா ஜெயக்குமார்



**"தோன்றிற் புகழொடு தோன்றுக"** என்பது வள்ளுவ பெருந்தகையின் திருக்குறள் கூற்று. இக் கூற்றுக் கமைவாக இப் பூவுலகில் தோன்றி தனது இசைப் பணியாலும் நிறைவான தன் சேவையாலும் ஆசிரியத்துவத்தினை மேன்மைப்படுத்திய வரே **அமரர்.கவிதா ஜெயக்குமார்** அவர்கள் என்றால் அது மிகையில்லை.

தனக்கு கிடைத்த இசை என்ற வரப்பிரசாதத்தினை மிக விரும்பி நேர்த்தியுடன் அனுபவித்துக் கற்பிப்பதில் மிகவும் வல்லவர். தனக்கென ஒரு மாணாக்கர் பரம்பரை யினை உருவாக்கியவர். மாணவர்களை பல போட்டிகளிலும் பங்குபற்ற வைத்து வெற்றிவாகை சூடிட வழி சமைத்ததோடு பாடசாலைக்கும் நற்பெயரை ஈட்டித் தந்தவர். மாணவர்கள் உயர்தரப் பெறுபேறுகளில் அதி திறமைச் சித்திகள் பெற்று பல்கலைக்கழகம் சென்று அவர்களின் வாழ்வு ஒளிபெற உழைத்தவர். தனக்கு கிடைத்த பொன்னான நேரத்தினையெல்லாம் மாணவர்களின் உயர்வுக்காகவும் பாடசாலையின் மேன்மைக்காகவும் செலவிட்டு உழைத்த உத்தமி. தாய்ப்பசு தன் கன்றுகளைத் தேடுவது போல் இவரும் மாணவர் இருக்கும் இடம் தேடிப்போய்க் கற்பிப்பார்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவர் ஒரு சிறந்த பண்பாளர். கற்பித்தல் பணி மட்டுமல்லாது பெரியவர் சிறியவர் என்ற பேதமின்றி உரிய மரியாதை நல்கி அன்பு பாராட்டியவர். தன்னிடம் கற்ற மாணவி ஒருவர் தான் தாய், தந்தையை இழந்தவர் என்பதனை அறிய நேர்ந்த பொழுது தானே அவளுக்கும் தாயாக இருப்பதாக பாசத்தோடு கூறியவர்.அடிக்கடி மாணவருக்கு **"என்னை உங்கள் அம்மாவாக நினையுங்கள், படியுங்கள்"** என்று பாசத்துடன் கூறியவர். ஆனாலும் துரதிஷ்டவசமாக கொடிய காலன் அவரைக் கவர்ந்த பொழுது அந்த மாணவிதான் இரண்டாவது தாயையும் இழந்து விட்டதாக வேதனையுடன் கண்ணீர் மல்கியமை மூலம் அவர் மீது கொண்ட ஈடுபாட்டைக் கண்டுணர முடிந்தது.

கொடிய நோய் அவரை வருத்திய போதும் அவரது நினைவும், கனவும் பாடசாலையையும், மாணவர்களையும் சுற்றியே வட்டமிட்டன. தான் நோய்க்கான சிகிச்சையினைப் பெற்றுக் கொண்டிருந்த நிலையிலும் பாடசாலைத் தமிழ்தினப் போட்டிகள், தேசிய மட்டப் போட்டிகளுக்கு தனது அப்பணிப்பான சேவையினை உரமாக்கியவர். உங்களை வருத்திக் கொள்ளாதீர்கள். உச்ச தொனியில் பாடாதீர்கள் என்று பலமுறை கூறினாலும் தன்னை வருத்தி சேவையாற்றியவர். தான் இல்லாவிட்டாலும் தன் இசையால் உங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பேன் இசைவாழும் என அடிக்கடி கூறிக் கொள்வார். அது போலவே தன் உத்தம சேவையால் அனைவரின் மனங்களிலும் இசையால் வாழ்கிறாா்.

பாடசாலைச் சமூகம்,

யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி கபளீகரண வர்த்தமானியை வாபஸ் பெற்றது அரசாங்கம்

## அதிலும் ட்விஸ்ட் வைத்த அநுர அரசு

வடக்கு மாகாணத்தின் 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிகளை கையகப் படுத்தும் அரசாங்கத்தின் வர்த்தமானிக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்காலத் தடை விதித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு காணி கபளீகரண வர்த்தமானியை மீளப்பெறுவதாக அரசாங்கம் புதிய வர்த்தமானியை வெளியிட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானியில் ஜூன் மாதம் 28 ஆம் திகதிக்குள் சான்றாதாரங்கள் மூலம் காணிகளின் உரிமைகள் நிலைநாட்டப்படாத காணிகளை அரசு சுவீகரிக்கும்என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு பல்வேறு தரப்பினரும் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக நேற்று முன்தினம் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் குறித்த வர்த்தமானிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து இடைக்காலத் தடை உத்தரவினையும் பெற்றிருந்தார். அந்தப் பின்புலத்திலேயே குறித்த வர்த்தமானியை வாபஸ் பெறுவதாக அரசாங்கம் புதிய வர்த்தமானி வெளியிட்டிருந்தது.

குறித்த புதிய வர்த்தமானியில் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் காணப்படுவதாகவும் வெளியிடப்பட்டிருந்த புதிய வர்த்தமானியில்காணிக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரிமை கோருபவர்களுக்குப் போதுமான வாய்ப்பை வழங்குவதற்காக இந்த வர்த்தமானி விலக்கப்படுகின்றது என்று குறிப்பிடப்படும் வாசகம் அரசின் அடுத்தகட்ட உள் நோக்கம் குறித்து பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. போதுமான வாய்ப்பை அளிக்கின்றோம் என்ற பெயரோடு மீண்டும் இந்தக் காணி சுவீகரிப்பு நடவடிக்கை புதிய வடிவத்தில் நடைமுறைக்கு வராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆகையால் இந்தப் புதிய வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக நாம் முழுமையாகத் திருப்தி அடைய முடியவில்லை. அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம் என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம-7)

# வீதி விபத்து ஒருவர் பலி

(பொத்துவில்)

பொத்துவில் வீதியில் நேற்று(28) அதிகாலை அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## வெளிவிவகார ...

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை நாட்டுக்கு வருகைதந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் கடந்த செவ்வாய்க்கிழமை (24) நீதியமைச்சு, காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும்நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகளை வெளிவிவகார அமைச்சில் சந்தித்து பொறுப்புக்கூறலுக்கான உள்ளகப் பொறிமுறை மற்றும் நல்லிணக்கச் செயன்முறை குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்புத் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரண, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்கள் உண்மையிலேயே சுயாதீனமானவை எனின், அவை வெளிவிவகார அமைச்சின் தலையீடு இன்றி உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கை தனியாகச் சந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாறாக வெளிவிவகார அமைச்சு அல்லது நீதியமைச்சு உள்ளடங்கலாக அரசாங்கத்தின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நிகழக்கூடிய சந்திப்பில் தமது கட்டமைப்புக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆதரவு குறித்தோ அல்லது போதியளவு ஆதரவு வழங்கப்படாமை குறித்தோ காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட கட்டமைப்புக்களின் அதிகாரிகளால் எவ்வாறு பிரஸ்தாபிக்க முடியும்? என்றும் த்யாகி ருவன்பத்திரண விசனம் வெளியிட்டுள்ளார். (ம-7)

## செம்மணி மனித ...

துள்ளனர்.

குறித்த போராட்டமானது நேற்று முன்தினம்(27) ஐக்கியராச்சியத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரால யத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

செம்மணி மாத்திரமல்லாது வடக்கு கிழக்கில் உள்ள 100இற்கு மேற்பட்ட பல்வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் முகமாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் அதிகளவில் பொதுமக்கள் மற்றும் புலம்பெயர்ந்த உறவுகள் என உரிமையுடன் இணைந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 01 - 1953



மறைவு 25 - 06 - 2025

## செல்லத்தம்பி ரவீந்திரன்

(உரிமையாளர் - R.V TEX R.S TEX யாழ்ப்பாணம்)

புதிய வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி ரவீந்திரன் (25.06.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி - ஞானாம்பிகை தம்பதியரின் மருமகனும் திலகவதி (பவானி) அவர்களின் அன்புக் கணவரும் பார்த்தீபன் (கனடா), பாமினி (லண்டன்), பிருந்தன், சுதாகர் (அமரர்), விஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாமினி, ராஜ்குமார், ராதா, தாரகா, கரிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அப்சனா, அபிஷாந், அக்ஷயன், அஸ்மிதன், லெசிகா, டயானிக்கா, சிவாஜினி, கரிராம், கர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் மகேந்திரராஜா (அமரர்), தர்மபாஸ்கரன் (அமரர்), உஷாதேவி (அமரர்), நகேஸ்வரன், கலாதேவி, பிரபாகரன் (அமரர்), சதாகரன், சிறிதரன், கெங்காதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஞானரூபன், பிரதீபன், கோகுலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

(4669)

வேலையாட்கள் தேவை

சிற்றுண்டிச்சாலைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
முழு நேரம்/ பகுதி நேரம் (ஆண்கள்)

தொடர்புகளுக்கு
077 275 9799

(4670)

கட்டட வேலை நிர்மானம்

சகல விதமான கட்டட வேலைகளும் Contract முறையில் நியாயமான விலையில் செய்து தரப்படும்.

076 230 6081

(4671)

இளங்கலைஞர் மன்றம்
நல்லூர்

மாதாந்தக் கலையரங்கு

காலம் : இன்று (29.06.2025)
நேரம் : பி.ப 04.30 மணி
இடம் : இளங்கலைஞர் மன்றம், நல்லூர்.

நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- மிருதங்க இசை அரங்கு : இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் வழங்கும் மிருதங்க இசையரங்கு
  நெறியாள்கை : திரு.க.சிவகுமார் அவர்கள் (மன்ற ஆசிரியர்)
- இசையரங்கு : குரலிசை திரு.ஜெ.மதுஷிகன்
  அணி செய் கலைஞர்கள்.
  வயலின் : திரு.இ.நிரோஜன்
  மிருதங்கம் : திரு.ஞா.வசந்
  கெஞ்சிரா : திரு.வி.ராகவன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாக சபை,
இளங்கலைஞர் மன்றம்

(C-3294)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரியின் ஆசிரிய விரிவுரையாளர் அம்பலவாணர் லோகநாதன் அவர்களின் மணிவிழா நிகழ்வு அண்மையில் கைதடி பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

# பிரித்தானிய பாராளுமன்றத்தில் தமிழ் சான்றோர் பாராட்டு விழா



யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த தமிழ்க் கவிஞர் திருமதி இரவீந்திரன் ஜெயதீஸ்வரி இங்கிலாந்து பாராளுமன்ற வளாகத்தின் வெஸ்ட்மின்ஸ்டரில் நடைபெற்ற விழாவில் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வினை சென்னை தமிழியல் ஆய்வு மையமும் லண்டன் குரோய்டன் தமிழ்ச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

20 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், கலாசாரப் பிரமுகர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் திரண்டிருந்த இந்த விழா, உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் இலக்கியச் சாதனைகளையும், மொழி மற்றும் பண்பாட்டுப் பங்களிப்புகளையும் போற்றும் விதமாக அமைந்தது.

இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச பிரமுகர்கள் முன்னிலையில், தமிழ் மரபைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும், எல்லைகள் கடந்து பரப்புவதிலும் அரும்பங்காற்றிய தமிழ் கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், கலாசாரத் தலைவர்களுக்கு விருதுகள் வழங்கிப் பாராட்டப்பட்டது.

இந்நிகழ்வில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆஸ்திரியாவில் வசித்து வரும் யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த தமிழ்க் கவிஞர் திருமதி இரவீந்திரன் ஜெயதீஸ்வரியும் கௌரவிப்பு செய்யப்பட்டார். புலம் பெயர்ந்து வாழ்ந்தபோதிலும், அவர் தமிழ் இலக்கிய இலக்கணத்தின் மீது கொண்ட ஆழ்ந்த பற்றுதலால், மரபுக் கவிதை வடிவங்களில் விரிவாகப் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

தமிழ் கவிதைக்கு அவர் ஆற்றிய தொடர்ச்சியான பங்களிப்புகளுக்காக அவருக்கு கௌரவிப்பு செய்யப்பட்டது. (நி)



# ஈழத்தின் வலி சொல்லும் வரை என் தலை சாயாது!

## திரைப்பட இயக்குநர் கௌதமன் கூளுரை



(சென்னை)

ஈழத்தில் எமது தமிழ் உறவுகள் எதிர்நோக்கிய வலிகளை வெளிப்படுத்தும் வகையில் வன்னிக்காடு படைப்பினை உருவாக்குவது எனது இலட்சியம் என தென்னிந்திய பிரபல இயக்குனரும் தமிழ் பேரரசு கட்சியின் தலைவருமான வ. கௌதமன் தெரிவித்துள்ளார்.

ஈழத்து கலைஞர்களின் தீப்பந்தம் திரைப்பட விழாவானது அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்றது. அங்கு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் நடைபெற்று 15 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இன்றைய இளைய தலைமுறைகள் இந்த யுத்தத்தை, இந்தப் பேரிழப்பை மறந்து மயக்க நிலையில் கடத்தப்பட்டிருக்கின்றார்கள்.

போதை, சினிமா என்பவற்றுக்குள் சிக்கியுள்ளது இளைஞர் சமுதாயம். இரத்த அபிஷேகம் நடைபெற்ற மண்ணில் அஜித் விஜய் உட்பட்ட திரையுலக பிரபலங்களின் படங்களுக்கு பாலாபிஷேகம் செய்கின்ற நிலை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் காணப்படுகிறது.

இவை அனைத்தையும் மாற்றி அமைக்கும் நோக்குடன் தான் அங்கு இருக்கின்ற எமது பிள்ளைகள் தீப்பந்தம் என்ற ஒரு அரிய படைப்பினை உருவாக்கியுள்ளார்கள். இனி வருகின்ற தலைமுறையாவது நாங்கள் எவற்றை எல்லாம் இழந்து இருக்கின்றோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் இந்த படைப்பு மூலம் வெளிக்கொணர தொடங்கி இருக்கின்றார்கள்.

இந்த உலகம் தலைகுனிய தலைகுனிய, கதறியழ அழ, இந்திய தேசம் உட்பட எமது மக்களை அழிப்பதற்கு காரணமான அதிகார வர்க்கங்கள் கல்லறையில் இருந்தாலும் அவர்களை தோண்டி எடுத்து துப்புகின்ற படைப்புகளாக என் இனத்தின் படைப்புகளை படைத்த பின்னர் தான் என் தலை சாயும்.

ஈழத் தமிழ் உறவுகளின் விடிவுக்காக எமது குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பண்பாடு அனைத்துலக மாநாடு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தஞ்சாவூர் அனைத்துலக பண்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு திருநெறிய தமிழ் சைவ சமயப் பாதுகாப்புப் பேரவை லண்டன் தமிழ் கல்வியகம் பிரான்ஸ் உலகச் செம்மொழித் தமிழ்ச் சங்கம், பிரான்ஸ் இந்திய வம்சாவளி மக்களுக்கான அமைப்பு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறையுடன் இணைந்து நடத்தும் தமிழ்ப் பண்பாடு அனைத்துலக மாநாடு நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், நுவரெலியா, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெற உள்ளதென இம் மாநாட்டின் இணைப்பாளரும் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் க.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

மாநாட்டின் தொடக்க விழா நாளை திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 10 மணியளவில் இந்து கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்பஸ்ரீ ச.பத்மநாபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. அத்துடன் நிகழ்வில் வரவேற்புரையினை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி. விக்னேஸ்வரி பவநேசன் நிகழ்த்தவுள்ளார்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா, கௌரவ விருந்தினர்களாக யாழ்.இந்திய துணைத்தூதுவர் எஸ்.ஸ்ரீசாய்முரளி, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி. தனுஜா முருகேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டின் நோக்கவுரையினை மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கலாநிதி க.பாஸ்கரன் நிகழ்த்தவுள்ளதுடன் வாழ்த்துரையினை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் மற்றும் பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன் ஆகியோரும் நன்றியுரையினை லண்டன் தமிழ்க் கல்வியக இயக்குநர் ச.முருகையாவும் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் சிறப்பு நிகழ்ச்சியாக கலைமாமணி கலாநிதி சாம்பசிவ சோமாஸ் கந்தசர்மா குருஜியின் "வள்ளி திருமணம்" என்னும் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (3)



யாழ்ப்பாண மாவட்டத்தின் விமானப் படையின் தளபதியாக புதிதாகப் பொறுப்பேற்ற குறூப் கப்டன் டி.எஸ்.எஸ் செனவிரத்ன, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை கடந்த 27 ஆம் திகதி மரியாதை நிமித்தம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# பசுமை அமைதி விருதுகள் விழா இன்று வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும்பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கடந்த ஆண்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2024 ஆம் ஆண்டின் சிறந்த சூழல் நேயச் செயற்பாட்டாளர் தால காவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட வுள்ளனர்.

மேலும், இவ்விழாவில் 2024 ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தாவராவதானி மதிப்பளிப்பும் இடம் பெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் யோ.நந்தகோபன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன் வடக்கு மாகாணத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எந்திரி திரு. ச. சர்வராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இலங்கையில் சுற்றுச்சூழல் சார்ந்து வழங்கப்பட்டு வரும் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவருகின்ற பசுமை அமைதி விருதுகள் முன்னிலை விருதுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-104)

# 2026 ஆம் ஆண்டு முதல் லஞ்சீட் பாவனைக்கு தடை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் லஞ்சீட் பாவனை 2026 ஆரம்பத்திலிருந்து முற்றாகத் தடை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சபை அமர்வில் இப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் நோக்கில், பிளாஸ்ரிக் பொருட்கள் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சபை அமர்வில், உப தவிசாளர் இ. ஜெயகரன் முன்வைத்த பிரேரணையின் அடிப்படையில், இந்தத் தீர்மானம் உறுப்பினர்களின் ஏக மனதான ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டது. (8)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஒரு நாய்க்கான உரிமம் கட்டணமாக 100 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (8)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 30.06.2025 | 9.00- 11.00 | அறிவொளி சனசமூக நிலையம் ஆறுகால்மடம் |
| | 11.00 - 1.00 | செழியன் வீதி |
| | 2.30- 4 .00 | புதிய குடியிருப்பு சனசமூக நிலையம் |
| 01.07.2025 | 9.00- 11.00 | R.C பாடசாலை நாவலர் வீதி |
| | 11.00 - 1 .00 | ஆசாத் வீதி |
| | 2.30- 4 .00 | 1ஆம் 2ஆம் 3ஆம் குறுக்குத்தெரு நாவலர் வீதி |
| 02.07.2025 | 9.00- 11.00 | சேமக்காலை வீதி கெனடி வீதி |
| | 11.00 - 1.00 | மேரி ஜோசப் வீதி ஜின்னா வீதி |
| | 2.30- 4 .00 | அண்ணா சனசமூக நிலையம் வசந்தபுரம் |
| 03.07.2025 | 9.00- 11.00 | சனசமூக நிலையம் சூரியஒளி |
| | 11.00 - 1 .00 | சனசமூக நிலையம் சென் நீக்கிலஸ் |
| | 2.30- 4 .00 | கோவில் ஒழுங்கை நாவாந்துறை |
| 04.07.2025 | 9.00- 11.00 | காதி அபூபக்கர் விதி நாவாந்துறை |
| | 11.00 - 1 .00 | கலைவாணி சனசமூக நிலையம் கண்ணாபுரம் |
| | 2.30- 4 .00 | கற்குளம் நாவாந்துறை வெள்ளாந்தெரு நாவாந்துறை |
| 07.05.2025 | 9.00- 11.00 | சிவன்பண்ணை சீனிவாசகம் வீதி சந்தி |
| | 11.00 - 1 .00 | கோணந்தோட்டம், யூனியன் வீதி |
| | 2.30- 4 .00 | சோலைபுரம், மண்பிட்டி |
| 08.07.2025 | 9.00- 11.00 | நடமாடும் தடுப்பூசி ஏற்றல் நாவாந்துறை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு |
| | 11.00 - 1 .00 | |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 450 | 600 | 600 |
| தக்காளி | 350 | 350 | 350 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 250 |
| கோவா | 400 | 450 | 450 | 300 | 500 |
| கரட் | 800 | 450 | 450 | 400 | 500 |
| பூசணி | 150 | 160 | 160 | 120 | 160 |
| புடோல் | 120 | 150 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 150-350 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 160 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 120 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 350 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 350 | 400 |
| லீக்ஸ் | 350 | 450 | 350 | 280 | 400 |
| பீற்றூட் | 300 | 250 | 400 | 280 | 250 |
| கறிமிளகாய் | 400 | 700 | 500 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1200 | 1300 | 900 | 1000 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 500 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 20-80 | 30-80 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 250 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 220 | 120-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 650 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 500 | 450 | 600 |
| முள்ளங்கி | 200 | 150 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 40 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 200 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 499
29.06.2025
பக்கம் 07

# அவமானப்படுகின்ற தமிழ் அரசியல் (வாதிகள்)



குருசேத்திரம்
-விதுரன்

தனிநாடு கேட்டுப் போராடிய எம் தமிழினம் இப்போது தனக்கான அரசியலையும் இழந்து நிற்கிறது.

ஆம், ஒரு காலத்தில் தந்தை செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி, சட்டமேதை ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பன தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற பலமான கட்சிகளாக இருந்தன.

கூடவே, நவரட்ணம் அவர்களின் சுயாட்சிக் கழகம் அன்றைய இளைஞர்களின் அரசியல் சித்தாந்தத்தை ஆற்றுப்படுத்தின.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சுயாட்சிக் கழகம் என்ற கட்சி அரசியல் அந்தந்த ஆதரவாளர்களை அடையாளப் படுத்தின.

உண்மை. ஓர் ஊரில் ஒரு பெயர் இரண்டு பேருக்கு இருக்குமாயின், அவர்கள் அந்த ஊரவர்களால் அரசியல் கட்சி மூலமே அடையாளப்படுத்தப் பட்டனர்.அது அவர்களுக்குப் பெருமையாகவும் இருந்தது.

தவிர, கட்சிக்களுக்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களும் ஏராளம் பேர் இருந்தனர்.

இன்னும் சிலர் தாம் சார்ந்த கட்சிக்காக இன்னொரு கட்சியில் அங்கம் பெற்றிருந்த தங்கள் நெருங்கிய உறவுகளுடன் பகை பாராட்டிய வரலாறுகளும் உண்டு.

இவ்விதமாக இருந்த எங்கள் தமிழ் அரசியல் கட்சிகளின் சமகாலம் எப்படியாகவுள்ளதென்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

உண்மை. இப்போதெல்லாம் கட்சி ஆதரவாளர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. மாறாக குறித்த கட்சியில் உள்ள பிரமுகருக்கான தனிப்பட்ட ஆதரவாளர்கள் இருக்கிறார்களே தவிர, கட்சிக்கான ஆதரவு என்ற அந்தப் புனிதமான பாரம்பரியக் கலாசாரம் வழக்கொழிந்து போயிற்று.

இது பொது மக்கள் சார்ந்ததாக இருக்கையில், கட்சிக்குள்ளும் அதே நிலைமை புரையோடியுள்ளது.

ஆம், கட்சியின் நிர்வாகிகள், மத்திய குழு உறுப்பினர்கள் கன்னை பிரிந்து நிற்கின்றனர்.

இவர் இவருடைய ஆள். அவர் அவருடைய ஆள் என்ற அடையாளப்படுத்தல்களே இப்போது மிஞ்சியுள்ளன.

இதனால் அரசியல்வாதிக்கான ஆதரவாளர்கள் இருக்கிறார்களேயன்றி, அரசியல் கட்சிக்கான ஆதரவாளர்கள் இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டனர்.

இதன் காரணமாக, அரசியல் பிரமுகர்கள் கௌரவமற்றவர்களாகிப் போனது தான் கண்ட மிச்சம்.

ஆம், தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் இப்போது ஒரு பொது நிகழ்வில் அச்சமின்றிப் பங்கு பற்ற முடிவதில்லை.

இதற்கு நல்லூர் செம்மணியில் கடந்த 25.06.2025 ஆம் திகதி நடந்த சம்பவம் சிறந்த சாட்சியமாகும்.



24.06.2025 அன்று செம்மணியில் **அணையாவிளக்கு** ஏற்றப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்பார்க்காத அளவில் அந்தப் போராட்டத்திற்குப் பொது மக்கள் வந்திருந்தனர்.

இதற்கு [illegible]

மைகள் பேரவையின் ஆணையாளரின் யாழ்ப்பாண வருகையும் காரணமாயிற்று.

எனினும் போராட்டத்தில் பங்குபற்றுவதற்காகச் சென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம், தமிழரசுக் கட்சி



யின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் அமைச்சர் சந்திரசேகரன், ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் ஆகியோர் போராட்டக் களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

அதிலும் சி.வி.கே சிவஞானம் அவர்களைப் போராட்டக் களத்தில இருந்து வெளியேற்றுகின்ற போது, அங்கு பிரயோகிக்கப்பட்ட வார்த்தைகள் [illegible] தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருக்கக் கூடிய மதிப்பு மரியாதை எத்தகையதென்பதை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமைகிறது.

அதேநேரம் ஒரு பொது வெளியில் வைத்து □□நாயே□□ என்று கூறுமளவிற்கு எங்கள் அரசியல்வாதிகள் எம் மக்களைக் கடுமையாக நோகடித்து விட்டார்கள் என்பதும் இங்கு நோக்கப்பட வேண்டிய விடயம்.

அதே சமயம் போராட்டங்களை ஏற்பாடு செய்கின்றவர்கள் போராட்டம் ஜோதியாக விஸ்வரூபமெடுக்கும் போது, அந்த விஸ்வரூபத்தைக் கண்டு பயந்து ஒதுங்கி விட, போராட்டத்திற்கு வந்த வல்லமை படைத்தவர்கள், போராட்டக் களத்தை தமக்கானதாக மாற்றி தங்கள் நினைப்பை சாதித்து விடுகின்றனர்.

இங்கு தான் போராட்டங்கள் நலினப்படுகின்ற நிலைமைக்கு ஆளாகின்றன.

ஆக, எதிர்வரும் காலங்களிலேனும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் உணர்வுக்கும் தாம் சார்ந்த கட்சிக்குமாக உழைக்க வேண்டும்.

இதைவிடுத்து தனித்தனி நபர்களுக்கான ஆதரவோடு இயங்கி அரசியல் நடத்த முற்பட்டால், நிலைமை இன்னும் மோசமாக இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## தமிழகத்து நடிகர்களை சிறைக்கு அனுப்புகிற போதை

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் மௌனம் நிலவியது. பண்டிதர் பரமலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன், என்ன பண்டிதர் ஐயா கடும் யோசனையில இருக்கிறியள் என்ன சங்கதி என வினவினார்.

**பண்டிதர்:** சொந்தப் பிரச்சினை எதுவும் இல்லை. எல்லாம் பொதுவானது தான். தமிழ் நாட்டின் விருதுநகரில உள்ள ஆலயமொன்றில அர்ச்சகர்கள் கும்மாளம் போடுறதை இணையத்தளங்களில பார்த்து அதிர்ந்து போனன்.

அதிலும் பழைய வீடியோக்காட்சியொன்றில சிவ சின்னமாகிய திருநீற்றை பெண்களின்ர தலையில கொட்டுறதைப் பார்த்த போது மனம் துடித்துப் போனது.

அந்தணச் சிவாச்சாரியர்கள் இப்படி நடந்தால், எங்கட நிலைமை என்னவாகும்.

**சாத்திரியார்:** ஏன் பண்டிதர் ஐயா! எங்கட யாழ்ப்பாணத்திலும் சில சிவாச்சாரியர்களின்ர நடவடிக்கைகள் தொடர்பில கடும் விமர்சனங்கள் இருக்கத்தானே செய்யுது.

அதிலும் சில சிவாச்சாரியர்கள் கோயிலை வியாபார ஸ்தாபனமாக ஆக்கி விட்டினம் என்ற குற்றச்சாட்டும் பரவலாக இருக்குது.

**விதனையார்:** கோயிலை வியாபார ஸ்தாபனமாக மாற்றினாலும் பரவாயில்லை. செய்கின்ற கிரியைகளையாவது ஒழுங்கு முறையாகச் செய்தால் நல்லதல்லோ.

அதுவும் இல்லாமல், மந்திரங்களும் தெரியாமல், தனித்துக் காசைப் பறிக்கிற நோக்கில செயற்படுவது தான் மிகப்பெரிய வேதனை.

**சாத்திரியார்:** விதானையார் சொல்லுறது முற்றிலும் உண்மை. அண்மையில யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு பிரபலமான கோயிலின்ர தேர்த்திருவிழா நடந்தது. அதில மூலமூர்த்தி முருகன். ஆனாலும் அங்க பிள்ளையாருக்கும் தேர் இருக்குது.

தேரில சுவாமிகள் எழுந்தருளி தீபம் காட்டும் போது, பிள்ளையாருக்குத் தீபம் காட்டப்படாமல் தனித்து முருகனுக்கு மட்டும் தீபத்தைக் காட்டிப் போட்டு தேர் இழுக்கப்பட்டிருக்குது.

இதுபோல தீவகத்தில உள்ள ஒரு கோயிலில மகோற்சவம் நடந்து கொடி இறக்கி சுவாமி வெளிவீதி வலம் வந்து வசந்த மண்டபத்தில அமர்ந்தார்.

உடன, வசந்த மண்டபத்தில சுவாமிக்கு முன்பாக சண்டேசுவரரை வைத்து, அவருக்குத் தீபம் காட்டப்பட்டது.

உண்மையில வெளிவீதி சுற்றிவந்த முருகனுக்கு காளாஞ்சி வைத்து பஞ்சாராத்தி காட்டிய பின்பு தான், சண்டேசுவரருக்குத் தீபம் காட்டி அவரை வெளிவீதி கொண்டு வர வேணும்.

என்ன செய்யிறது செப்படி வித்தை செய்ய நினைத்தால் எல்லாம் அம்போ எண்டு தான் போகும்.

**வாத்தியார்:** இதுதான் நான் அடிக்கடி சொல்லுறது அடியார் பெருமக்கள்-கடவுள் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்கள் பூசை வழிபாட்டைச் செய்ய வேணும்.

இதை விடுத்து காசுக்கு காரியம் செய்ய வெளிக்கிட்டால் அங்க, ஏமாற்று வேலைகள் தான் நடக்கும்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறதை நானும் ஏற்றுக் கொள்கிறன்.

உண்மையில கிராமியத் தெய்வங்களுக்கான பூசை வழிபாட்டை அந்தந்த ஊரில இருக்கிறவர்கள் செய்ய வேணும்.

முன்பெல்லாம் சங்கு ஊதி, சேமக்கலம் அடித்து நாங்களே பூசை செய்த ஆலடி வைரவருக்கு இப்ப குடமுழுக்குச் செய்து அதையும் சிவாச்சாரியர்களிடம் ஒப்படைத்து விட, அவர்களால தான் என்ன செய்ய முடியும்.

குறைந்தளவு சிவாச்சாரியர்கள். அதிகளவு கோயில்கள். ஓர் அர்ச்சகர் பத்துப்பன்னிரெண்டு கோயில்களில நித்திய பூசை செய்தால், ஒழுங்காப் பூசை செய்ய முடியுமோ.

இதால தான் எல்லாம் பழுதாப் போயிற்றுது.

அதைவிட இப்ப மலையகத்தைச் சேர்ந்த ஆண் பிள்ளைகளை அழைத்து வந்து, அவர்களுக்கு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்து அவையளைக் கொண்டு கோயிலில நித்திய பூசை செய்யிற வியாபாரமும் நடக்குது.

**மூப்பர்:** அப்ப விதானையார், மலையகத்துப் பிள்ளைகள் ஐயர் பிள்ளைகளோ.

**விதனையார்:** ஐயோ கடவுளே! அந்தப் பிள்ளைகள் வறுமை காரணமாக இங்க வந்தவியள். இப்ப அவர்களை ஐயர் ஆக்கி தங்கட வியாபாரத்தை நடத்துகிற அளவில குறிப்பிட்ட சில சிவாச்சாரியர்கள் வந்திட்டினம்.

இதை நாங்கள் சொல்லும் போது, இன்னமும் ஒழுக்க சீலர்களான சிவாச்சாரியர்கள் எங்கள் மத்தியில இருந்து கிரியா வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்யினம் என்ற உண்மையையும் நாங்கள் சொல்லித்தான் ஆக வேணும்.

இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:** இப்ப எங்கும் பிரச்சினை தான். இந்தாப் பாருங்க போதைப் பாவனையில தமிழ் நாட்டு நடிகர்கள் சிக்கியிருக்கிறதான செய்திகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

அதோட நடிகர் சிறிகாந்தை, போதைப் பாவனை தொடர்பில தமிழ் நாட்டுப் பொலிஸார் கைது செய்திருக்கினம்.

அதுமாதிரி இஞ்சயும் சில வித்துவான்கள் கஞ்சாவோட காலம் போக்குகினம் எண்டு கேள்வி.

**கங்காணி:** அது சரி, தென்னைமரத்தில உள்ள வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்திற நடவடிக்கை ஆரம்பமாகப் போகுது எண்டு அறிந்தன் உண்மை தானோ!

**விதானையார்:** இப்ப 90 வீதம் வெள்ளை ஈ கட்டுப்பாட்டிற்குள் வந்திட்டுது. கடவுள் புண்ணியத்தில இடையிடையே பெய்த மழையும் ஒரு முறை அடித்த கடும் காற்றும் மழையும் சேர்ந்து வெள்ளை ஈயை அழித்துப் போட்டுது.

ஆனாலும் கறுப்பும் பங்கசும் பிடித்த தென்னை ஓலைகளை கழுவுறது நல்லது. என்ன இருந்தாலும் அந்தந்த நேரத்தில அதை அதைச் செய்ய வேணும்.

இப்ப தென்னைகளுக்கான உரம், மானியத்தில வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதையும் மழைக்கு முன்னர் வழங்கினால் தான் பிரயோசனம்.

மழையெல்லாம் முடிந்த பின்பு மானிய உரம் கிடைத்தால், அதால எந்தப் பிரயோசனமும் இருக்காது.

ஆகையால காலம் கடந்த பிரயோசனமற்ற வேலைகளைச் செய்யாமல், அந்தந்த நேரத்தில அதை அதைச் செய்ய வேணும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செம்மணி புதைகுழிப் பகுதிக்கு வந்த கடல் தொழில் அமைச்சரை விரட்டியடித்தது சரியான செயலா வியாசரே?



# வியாசர் பதில்கள்



மனித உரிமை ஆணையாளரின் செம்மணி விஜயம் எதை உணர்த்தியுள்ளது வியாசரே?

**சினிமாதான் வாழ்க்கை என்று நினைக்கும் எம் இளம் தலைமுறைக்கு ஏதும் அறிவுரை கூறுங்களேன்?**

ரங்கசாமி-நெல்லியடி

தற்போதைய சமூகம் மாறிவிட்டது. இவர்களிடம் சமூக சிந்தனை இல்லை. தன்மீதும் தன் மக்கள் மீதும் பற்று இல்லை.

அதன் வெளிப்பாடாயே தற்போதைய சினிமாக்களும் வருகின்றன. வெளி வரும் திரைப்படங்கள் அனைத்திலும் வன் முறை நிறைந்து வழிகின்றது.

இதில் கொடுமை என்னவென்றால்,

வன்முறையில் ஈடுபடுவதே அந்தத் திரைப் படத்தின் கதாநாயகன் என்பது தான்.

தவறைச் சரி என்று நினைக்கும் சமூகத் திடம் போய் நீ நினைப்பது தவறு என்றால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ன?

**புறம் சொல்லும் உறவுகள் இப்போதும் இருக்கிறார்களே வியாசரே?**

மகாலட்சுமி-கொக்குவில்

பின்னால் பேசுபவர்கள் பற்றி நாம் சிந்தித்தால் முன்னேறிச் செல்ல முடியாது.

இது நியூற்றனின் மூன்றாம் விதியுலகம். எந்தத் தாக்கத்திற்கும் மறுதாக்கம் உண்டு.

ஆதலால் அந்த மறுதாக்கங்களைப் பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

புன்னகை ஒன்றே போதுமானது.

**மூன்றாம் உலகப் போர் தொடங்குமா?**

குமார்-யாழ்ப்பாணம்

ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் இருந்தும் நூலிழையில் அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

மூன்றாம் உலகப் போர் தொடங்குமாக இருந்தால் அது உலக அழிவு என்றே கூறி விடலாம்.

அந்தளவிற்கு அணு ஆயுதங்கள் அனைத்து நாடுகளிடமும் கொட்டிக் கிடக்கிறது.

கோபத்தின் உச்சம் கண்ணை மறைத்துவிட அணு ஆயுதத்தில் ஒருவர் கை வைத்தாலே அது அணு ஆயுதப் போராக மாற்றம் பெறும்.

அதன் முடிவு உலகம் அழியும்.

**செம்மணி புதைகுழிப் பகுதிக்கு வந்த கடற்றொழில் அமைச்சரை விரட்டியடித்தது சரியான செயலா வியாசரே?**

தமிழ்-யாழ்ப்பாணம்

செம்மணிப் புதைகுழிப் பகுதி அரசியல் தளம் இல்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

அது எமது உறவுகளுக்கு நீதி கோரும் மையம். அங்கு வருபவர்களைக் கட்டுப் படுத்தும் அதிகாரத்தை எம்மிடம் யார் தந்தது என்பதுதான் இன்றைய முக்கிய கேள்வி.

தமது அரசியல் ஆதாயங்களுக்காக சிலர் செயற்படுகின்றார்கள் என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

முதலில் இவர்களைத்தான் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தியிருக்க வேண்டும்.


அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

0076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்


**மனித உரிமை ஆணையாளரின் செம்மணி விஜயம் எதை உணர்த்தியுள்ளது வியாசரே?**

இந்திரஜித்-மந்துவில்

செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட்டவர் அணையா விளக்குப் போராட்டத்துக்கு வந்து அங்கு ஏற்றப்பட்டிருந்த தீபத்தைத் தொட்டு வணங்கியிருப்பது சாதாரண விடயம் அல்ல.

பெரும்பான்மை அரசாங்கத்திற்கு பெரும் செய்தியை அது கூறியிருக்கிறது.

பொறுத்திருந்து பார்ப்போம் நிலை எவ்வாறு இருக்கப் போகிறது என்று.

**செம்மணிப் புதைகுழிக்கு நீதி கிடைக்குமோ வியாசரே?**

இந்து-வதிரி

நீதி கிடைக்கிறதோ இல்லையோ நீதி கோரிய எமது போராட்டத்தை ஒரு நாளும் கைவிடக் கூடாது.

அது எமது இனத்தை பலவீனப்படுத்தி விடும்.

அவ்வாறு நாம் பலவீனப்பட்டால் வருபவர் போபவர் எல்லாம் பிடரியில் அடிக்கப் பார்ப்பர்.

**வாழ்க்கை வெறுப்பதைப்போல இருந்தால் என்ன செய்யலாம் வியாசரே?**

ரிதுஷ்-வதிரி

தமிழர்களாகிய எம்மிடம் சுற்றுலாவும் தன்மை மிகமிகக் குறைவு.

நல்ல வேலை, அதிக பணம் சம்பாதிப்பது, நிறையச் சொத்து சேர்ப்பது என்று வாழ்க்கையின் முக்கால்வாசியைக் கடந்து விட்டு நிம்மதியில்லை. நோய் விரட்டுகிறது எனப் புலம்புவதே எமது தலைவிதியாகி விட்டது.

வாழ்க்கை என்பது பணமும் பதவியும் நிறைந்த ஒன்றல்லவே என்பது எமக்கு புரியும்போது எம்மிடம் வாழ்க்கையை வாழத் தென்பிருக்காது.

**தற்போதைய சமூகத்தினரிடையே குடும்ப உறவு இல்லாது போய்விட்டதே வியா சரே?**

அனகன்-மாதகல்

அவசர உலகம். இருப்பதை வைத்து வாழத் தெரியாமல் பேராசை கொண்ட பயணம். வீட்டில் பயன்தரு மரங்களை வைத்துண்டாக்க முடியாத நிலை. பத்துக் கோழியை வளவில் விட்டால் கௌரவம் இல்லை என்ற நினைப்பு.

பால்மாடு நின்றால் மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்ற பெரும் கொடுமை.

ஆடு வளர்த்தால் புளுக்கையை யார் அள்ளுவது என்ற அரியண்டம்.

அவை அனைத்தும் எமது குடும்ப சமூகக் கட்டமைப்பை சல்லடை போட்டுவிட்டது.


**இனிக்காத பழம் என்ன பழம் என்று கூற முடியுமா வியாசரே?**

தவராஜன்-கொற்றாவத்தை

அப்பளம். அதைக்கூடப் பொரித்து நான்கு நாட்கள் இளக வைத்துச் சாப்பிட்டால் இனிக்கவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை மோதும் மனம்



அலை மோதும் கடலிலே
தடுமாறும் ஓடம் ஒன்று
கரை சேரும் என்றானே
காற்று நின்றாலே போதும்
அலை தானே ஓயும்,

அலை மோதும் மனதாலே
தடுமாறும் வாழ்விலே
இறைசேரும் நாள் சுகமே!
மனம் அலையாது, நிலை குலையாது
வாழ்வதே மனிதன் வாழ்வே!
நிலையான வாழ்வென்று
நீ தேடியது பொருளா தெய்வ அருளா!
விலையான பொருள் யாவும்
மரணத்தில் மாயும் அன்றும்
தெய்வ அருளே மனத்தில் சாந்தி.

**ஆறுமுகம் சிவபாதம்,**
**இணுவில்.**

# ஏட்டுச் சுரைக்காய்



கண்டு மகிழ்ந்தும் காணாது இகழ்ந்தும்
நேரம் ஒரு கதை தாளம் ஒரு மிதி - எனுப்போல்
ஏடெடுத்துப் படித்திடினும் பாட்டெடுத்து பாடினிலும்
ஏட்டுச் சுரைக்காயாய் ஒன்றுக்கும் உதவாமல்
கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்
என்ற சொற்பதம் மெய்யாகிப் போனதுவே.

**சி.மகாலட்சுமி, கொக்குவில்.**

# கலக்கும் கந்தர்...



கந்தரும் காலை எழுந்ததும்
காக்காய் போலப் பறந்தடித்து
அந்தரம் கொண்டு ஓடினாரே
அருகில் பெற்றோல் வாங்கிட
அந்தரமான அணிவகுப்பில் நின்று
ஆனந்தமாய் அடித்தார் பெற்றோல்
அந்தரமேன் என்று கேட்டதும்
அண்டை வீட்டில் சண்டையென்றார்.

**கவிவேந்தர் பொன்.சுகந்தன்**

# ஆடுகள் பாவம்...



சாதலின் கடைசி வலியிலும்
தனதன்பை பதிலீடென
அமைதியாகத் தரும்
ஆடுகளின் கண்களில்
வழியும் கடைசி நம்பிக்கைகூட
வளர்த்தவன் கைகளில்
இருப்பது
அட்டைக் கத்தியேயென...

ஊட்டி வளர்த்தவனின்
கோரைப்பற்களை
அறியாத அப்பாவி ஆடுகள்
பாவம்...

இப்படித்தான் சிலர் முன்
வாழ்வெனும் பெருவேள்வி
நீண்டு கிடக்கின்றது..
சிலர் அறிந்தும்
சிலர் அறியாமலும்
பலியாடுகளாகின்றனர்...

**சங்கரி சிவகணேசன்**

# பெண்மணியே...



கருவறை என்ற சிம்மாசனத்தில்
சுகமாய் அமர்ந்தவளே...!
மாதம் பத்து கழிந்திட - அவள்
சுவாசங்கள் பூமியில் கலந்திடுமே...!

சேற்றினில் நாற்று நட்டிடுவாள்
வேற்றுக் கிரகத்திலும்
தன்புகழ் ஈட்டிடுவாள்
காற்றிலும் பறந்திடுவாள்
காதல் அன்பும் கனிவாய்
பேசிடுவாள்...!

மனதில் பல வலிகளை
மறைத்திடுவாள்
மற்றவர் வதனங்களில்
புன்னகையாய் பரிணமித்திடுவாள்

பாரதி கண்ட புதுமை
பெண் அல்லவா...!
பாரும் போற்றிடும் பதுமை
பெண் அல்லவா...!

பெண்ணே பெண்மையை
தோற்றுவிக்கும்
பெருமையுடையவள்
பெண்ணியம் பேசிடும்
கண்ணியமும் உடையவள்...!

வையமும் வணங்கிடும்
புலமங்கையாக - என்றும்
வலம் வந்திடும்
தேவ மங்கையே...!

ஆயுள் நீண்டு
ஆயிரம் ஆண்டு
வாழிய! வாழிய!
பெண்மணியே...!

**ச.அகல்யா, சண்டிலிப்பாய்.**

# நரம்பில்லா நாவே



நரம்பில்லா நாவே.
உன் பேச்சில் வரம்பிருக்கட்டும்
அறிவின் ஆரம்பம்
நீயாக இருக்க சில
நேரங்களில் அறியாமையை
அள்ளி நகைக்கின்றாய் நீ
சொல்லும் செயலும்
வெல்லும் சொற்களாகட்டும்.
பணிவும் இன்சொல்லும்
வாழ்வின் துணையாகட்டும்.
கல்லில் அடிபடாதவர்கள்
ஆயிரம் இருக்கலாம்
வன்சொல்லில்
வதைபடுபவர்கள் யாருமுண்டோ.
தீயினால் சுடுங்கள்
நாவினால் சுடாதீர்கள்.
பயனில்லா சொற்கள்
பாதையை மாற்றும்.
உதிர்ந்து விட்ட
வார்த்தைகளுக்கு நீ அடிமை.
உதிராத வார்த்தைகளுக்கு
நீயே அதிபதி
நாவே நல்லவற்றை பேசு.
நம்பிக்கையோடு பேசு.
அறிவை அறிவி
ஆற்றலைப் பேசு
அன்பாகப் பேசு
பண்பாகப் பேசு.
பணிவாகப் பேசு.
நயம்படச் சொல்
நல்லவற்றைச் சொல்
தெரிந்து சொல்.
தெளிவாகச் சொல்
இடமறிந்து சொல்
இடர் பட்டவர்கள் வாழ்வை.
இடமறிந்து வளம்பெறச் சொல்.
அதையும் அவையறிந்து சொல்.

**சசி. சுயா**

**நினைத்தக் கலசம்**


# அன்பு வாசகர்களே!

**உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...**

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கு வலுச்சேர்த்த அணையா(து) விளக்கு

# அறவழிப் போராட்டம்



அபிமன்யு

> “ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளர் செம்மணிப் புதைகுழிக்கு, நீதிவேண்டி ஏற்றப்பட்ட அணையா விளக்கில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியமை தமிழ்மக்களின் மனக்காயங்களுக்கு மருந்திடுவதாய் அமைந்தது.”

தமிழினத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய கட்டாயத்தில் சர்வதேசம் இருக்கின்றது என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டர்க்கின் இலங்கை விஜயம் உணர்த்தியுள்ளது.

மூன்று தசாப்தத்திற்கு மேலான உள்நாட்டுப் போரில் பெரிதும் பாதிக்கப்பட்டது அப்பாவிப் பொதுமக்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

மனித இனம் எவ்வாறான இன்னல்களை அனுபவிக்கக் கூடாதோ, அவை அனைத்தையும் தமிழினம் அனுபவித்தது என்பது ஆட்சியாளர்களுக்கு தீராத பாவச்சுமை என்பதை இவ் விடத்தில் கூறித்தான் ஆக வேண்டும்.

ஏனெனில் அவ்வளவுக்கு தமிழினம் உடல், உள ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது.

இறுதி யுத்தத்தில் போர்க்குற்ற மீறல்கள் தாராளமாய் நடந்ததற்கான ஆதாரங்கள் பல சர்வதேசத்தின் கையில் இருந்தும் நீதியை நிலை நாட்டாதது ஏன் என்ற கேள்வி தமிழர் மனங்களில் குமுறிக் கொண்டிருக்கிறது.

சகலதையும் அறிந்த சர்வதேசம் கண்டும் காணாமலும் விட்டு விட்டதை தமிழினம் எடுத்துக்கொண்ட விதம் வேறானது என்பதை சர்வதேசம் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

மாறாக வருடத்தில் ஒருமுறை நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் “ஈழத்தமிழர் விடயத்தில் இலங்கை அரசு கரிசனை கொள்ள வேண்டும். அத்துடன் யுத்த மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும்” என்ற அறிக்கையுடன் அவர்களின் பணி நிறைவுற்றதாய் கருதினர்.

இவ்விடயத்தை ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்து செய்தியிடுகிறதே தவிர இதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் செவி சாய்க்கவில்லை என்பதுதான் வேதனையான உண்மை. நிலை இவ்வாறு இருக்கையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டர்க் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

ஏலவே மனித உரிமை ஆணையாளரின் இலங்கை விஜயம் தொடர்பான செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து அவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய வேண்டும் என்றும் செம்மணிப் புதைகுழியையும் முள்ளிவாய்க்கால் திடலையும் பார்வையிட வேண்டும் எனவும் பல்வேறு அமைப்புகள் கோரியிருந்த நிலையிலேயே அவரின் யாழ். விஜயம் அமைந்திருந்தது. ஐக்கிய நாடுகள் சபை ஆணையாளரின் வருகையை முன்னிட்டு செம்மணிப் பகுதியில் “அணையா விளக்கு” அறவழிப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் பேதங்களைத் தவிர்த்து பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கான நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்ற முனைப்புடன் மேற்கொள்ளப்பட்ட “அணையா விளக்கு” அறவழிப் போராட்டம் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்ற நிலையில் மனித உரிமை ஆணையாளர் செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட்டதுடன் “அணையா விளக்கு” திடலுக்கு வருகை தந்து அங்கு ஏற்றப்பட்டிருந்த தீபத்தைத் தொட்டு வணங்கி உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியமை தமிழினத்தின் நெஞ்சங்களை உயிர்பெறச் செய்துள்ளது.



எங்கே எமது இனத்திற்கான நீதி மறுக்கப்பட்டு விடுமோ என ஏங்கித் தவித்த தமிழினத்துக்கு அவரின் வருகை புதுத் தென்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழினத்துக்கான நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையொளியை ஏற்றியுள்ளது. செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட்டதன் பின் மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்துக்கள் உணர்வுபூர்வமான கருத்துக்களாக இருந்தன.

பாதிக்கப்பட்ட மக்களின் வலிகளை உணர்ந்த ஒரு சாதாரண மனிதராக அவர் பேசியது மேலும் தமிழினத்தின் மனக்காயங்களுக்கு மருந்திடுவதாய் அமைந்தது.

“நான் செம்மணிப் பகுதியில் உள்ள பாரிய புதைகுழிப் பகுதிக்குச் சென்றிருந்தேன். கொடூரமான கடந்த காலங்கள் தெளிவாகப் புலப்படும் இடங்களுக்குச் செல்வது உணர்பூர்வமான விடயம். அங்கு நான் தமது அன்புக்குரியவர்களைத் தொலைத்த உறவுகளைச் சந்தித்தேன்.

தமது உறவுகளைத்தொலைத்து விட்டு அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் பேசும்போது அத்துன்பம் என்னையும் ஆட்கொண்டது.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். “அதற்கான பொறுப்புக்கூறலை சம்பந்தப்பட்டவர்கள் செய்தாக வேண்டும்” என்றவாறு உணர்பூர்வமாகப் பேசியிருந்தார்.

காணாமல் போதல் என்பது மிகக் கொடுமையானது. காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற காரணத்தையே கேட்கின்றனர்.

அந்தக் காரணத்தை பாரிய மனிதப்புதைகுழி இருக்கும் இடத்தில் நின்று கேட்டது எத்தனை வலி நிறைந்தது என்பதை மனித உரிமைகள் ஆணையாளர் நன்குணர்ந்திருப்பார்.

ஆயினும் இக்கொடூரத்தை மேற்கொள்ளத் தூண்டுதலாக இருந்தவர்களோ, இக் கொடூரத்தைச் செய்தவர்களோ இது தொடர்பில் சிந்திக்காதிருப்பது இன்னும் வருத்தத்திற்குரியது. சர்வதேசம் இலங்கை விடயத்தில் உள்நாட்டு பொறிமுறையை ஊக்குவிக்கப் பார்க்கிறது.

ஆயினும் தமிழினம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நிற்கிறது. ஏனெனில், காலம் காலமாக வந்த பெரும்பான்மை ஆட்சியாளர்களால் தமிழினம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்தனரே தவிர தமிழினத்துக்கான நீதியைப் பெற்றுத்தர அவர்கள் இம்மியும் முயற்சிக்கவில்லை.

இவ்வாறான நிலையிலேயே தமிழினம் உள்ளகப் பொறிமுறையை எதிர்க்கின்றது.

தவிர, தவறு செய்தவர்களே அந்தத் தவறை விசாரிக்கும் போது அது நீதியான விசாரணைகளாக இருக்காது என தமிழினம் கருதுகிறது. அவ்வாறு கருதுவதில் தவறேதும் இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் யாழ்ப்பாண விஜயம் உணர்வுபூர்வமானது. அதைத் தமிழினம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

தவறு செய்தவன் தவறை உணர்ந்து வருந்தினால் அவனை மன்னித்து விடுவதே மனிதப் பண்பு. இப்பண்பு தமிழினத்திடம் நிறையவே இருக்கிறது.

ஆனால், தவறு செய்தவர்கள் தான் தவறு செய்யவில்லை என்கிறார்கள்.

அவர்களைப் பாதுகாப்போம் என பெரும்பான்மை இனவாத சக்திகள் சில வரிந்துகட்டி நிற்கின்றனர்.

இவ்வாறான நிலையில் உள்ளகப் பொறிமுறையை தமிழினத்தால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: தங்கப்பதக்கம்
இசை: Ms விஸ்வநாதன்
பாடியவர்கள்: P சுசீலா, TM சவுந்தர்ராஜன்
வரிகள்: கண்ணதாசன்



நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
அன்பு மணி வழங்கும் சுரங்கம் வாழ்க வாழ்க

எங்கள் வீடு கோகுலம் என் மகன் தான் கண்ணனாம்
தந்தை வாழுதேவனோ தங்கமானா மன்னனாம்
எங்கள் வீடு கோகுலம் என் மகன் தான் கண்ணனாம்
தந்தை வாழுதேவனோ தங்கமானா மன்னனாம்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்....

அன்னை என்னும் கடல் தந்தது
தந்தை என்னும் நிழல் தந்தது
அன்னை என்னும் கடல் தந்தது
தந்தை என்னும் நிழல் தந்தது

பிள்ளை செல்வம் என்னும் வண்ணம் கண்ணன் பிறந்தான்
நன்றி என்னும் குணம் கொண்டது
நன்மை செய்யும் மனம் கொண்டது
எங்கள் இல்லம் பேரை கண்ணன் வளர்ப்பான்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்....

வெள்ளம் போல ஓடுவான் வெண்மனல் மேல் ஆடுவான்
கானம் கோடி பாடுவான் கண்ணன் என்னைத் தேடுவான்
(கானம் கோடி..)

மாயம் செய்யும் மகன் வந்தது ஆயர்பாடி பயம் கொண்டது
அந்த பிள்ளை செய்யும் லீலை நானறிவேன்
இந்த பிள்ளை நலம் கொள்ளவும்
என்னைப் பார்த்து எனை வெல்லவும்
கண்ணில் வைத்து நெஞ்சில் வைத்து நான் வளர்த்தேன்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்....

கோலம் கொண்ட பாலனே கோவில் கொண்ட தெய்வமாம்
தாயில் பிள்ளை பாசமே தட்டில் வைத்த தீபமாம்

பாசம் என்று எதை சொல்வது
பக்தி என்று எதை சொல்வது
அன்னை தந்தை காட்டும் நல்ல சொந்தம் அல்லவா?
பிள்ளை என்னும் துணை வந்தது
உள்ளம் என்றும் இடம் கொண்டது
இல்லம் கண்டு தெய்வம் தந்த செல்வம் அல்லவா?

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்....

# அணுகுண்டுகள் வெடித்தால் பூமி என்னவாகும்?

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இந்த ஆற்றலை நாம் உருவாக்க வேண்டுமானால் ஒவ்வொரு விநாடியும் பல கோடி அணுகுண்டுகளை வெடித்தாக வேண்டும்.

சூரியனுக்கு அருகிலிருக்கும் இந்த வலிமையான கதிரியக்கம் 14.96 கோடி கிலோ மீற்றர் தூரம் பயணித்து பூமியை வந்தடைகிறது. இந்த நெடும் தூரப் பயணத்தில் கதிரியக்கம் தன் வலுவை பெரும் அளவில் இழக்கிறது. அதனால் இதமான சூரிய ஒளியாய் பூமியில் விழுகிறது.

சூரியனில் நடப்பதுபோல் இரண்டு ஹைட்ரஜன் அணுக்களைக் கொண்டு ஹீலியம் உருவாக்கும் தொழில்நுட்பம் இன்றும் எந்த நாட்டிலும் இல்லை. இப்படி இரண்டு அணுக்கள் சேர்ந்து ஓர் அணுவாக மாறுவதால் ஆற்றல் மட்டுமே கிடைக்கிறது. மோசமான கதிரியக்கப் பொருட்கள் உருவாக்குவதில்லை. அதனால் இந்த தொழில்நுட்பத்தை மின்சாரம் தயாரிக்கப் பயன்படுத்தலாம். பல நாடுகள் இந்த தொழில்நுட்பத்தை உருவாக்கப் போட்டிப் போட்டு வருகிறது. இது சாத்தியமானால் இன்னும் சக்திவாய்ந்த ஹைட்ரஜன் அணுகுண்டுகள் தயாரிக்கலாம்.

அணுகுண்டைத் தயாரிக்க எளிதில் உடையக்கூடிய யுரேனியம்-233, யுரேனியம்-235, புளூட்டோனியம் -239 ஆகிய தனிமங்களைப் பயன்படுத்துகின்றனர்.

உலகில் நிறைய அணு உலைகள் உள்ளன. இந்த அணு உலைகளின் நோக்கம் மின்சாரம் உற்பத்திதான். ஆனால் கூடவே அணு உலையில் யுரேனியம்-235 மற்றும் யுரேனியம் 238 ஆகிய தனிமங்களும் உற்பத்தி ஆகின்றன. இவற்றைக் கொண்டுதான் சக்தி வாய்ந்த அணுகுண்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

யுரேனியம், புளூட்டோனியம் மற்றும் தோரிய அணுக்கள் உருவத்தில் பெரியவை. இந்த பெரிய அணுக்கள் உடையும்போது நிறையக் கதிரியக்க ஆற்றல் வெளிப்படுகிறது. கூடவே இரண்டு சிறிய வகை அணுக்கள் உருவாகின்றன. இந்த சின்ன அணுக்களும் அடுத்து உடைகிறது. அதனால் பல வகையான கதிரியக்க பொருட்களும் வலுவான ஆற்றலும் உருவாகின்றன.

ஒரு கிராம் யுரேனியத்தில் $2.56 \times 10^{21}$ என்ற எண்ணிக்கையில் அணுக்கள் உள்ளன. 256இற்குப் பின் 19 பூஜ்ஜியத்தைச் சேர்க்க வேண்டும். அதாவது ஒரு கிராமில் உள்ள 2560000000000000000000 அணுக்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒரே நேரத்தில் பிளவுபடுகிறன. இரண்டாகப் பிளந்த இந்த சிறு அணுகள் மேலும் சிறியதாகப் பிளவுபடுகின்றன. இது மாதிரி இந்த அணுக்கள் மேலும் மேலும் பிளவுபடுகிறன. இவை அனைத்தும் ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் நடந்து முடிவடைந்து விடுகிறது. அதனால் அபரிமித ஆற்றலும் வகை வகையான கதிரியக்கப் பொருட்களும் உற்பத்தியாகிறன.

ஒரு அணு உடைந்தால் பெரிதாக ஒன்றும் நடந்துவிடாது. ஆனால் குண்டன் என்ற அணுகுண்டில் சுமார் 4000 கிலோ புளுட்டோனியம் திணிக்கப்பட்டிருந்து. அத்தனையும் ஒரே நேரத்தில் பலமுறை வெடித்ததால்தான் இந்த பேரழிவு.

**ஏன் இப்படி இந்த அணு குண்டுகளை நடுவானில் வெடிக்கச் செய்கிறனர்?**

அதிக பரப்பளவில் உள்ள கட்டடங்களைத் தரைமட்டமாக்கவும் அந்த பகுதியில் உள்ள நீர், நிலம் மற்றும் காற்றில் கதிரியக்க பொருளைப் பரப்புவதற்காகவும்தான் இந்த ஏற்பாடு. இதனால் வாழ் நிலம், சுவாசிக்கும் காற்று மற்றும் அங்குள்ள குடிநீர் ஆதாரங்கள் பாழடையும். தரையில் வெடிக்கச் செய்தால் இவ்வளவு சேதம் வராது. பூமி அந்த அதிர்வைத் தாங்கிக் கொள்ளும். நஞ்சு கதிரியக்க பொருட்கள் அதிக தூரம் பரவாது.

**அணுகுண்டு வெடித்த இடத்தில் பாதிப்பு எவ்வளவு காலம் இருக்கும்?**

யுரேனியம்-235 என்ற அணு காமா கதிரியக்கத்தை உமிழும் தன்மை உடையது. இது அணுகுண்டு வெடித்த இடத்தில் 1 கிலோ அளவு உள்ளதாக வைத்துக் கொள்ளுவோம். 70.38 கோடி ஆண்டுகளில் இந்த அணு 500 கிராமாகக் குறையும். அடுத்த 70.38 கோடி ஆண்டுகளில் 25 கிராமாகக் குறையும். இப்படி ஒவ்வொரு 70.38 கோடி ஆண்டுகளிலும் இதன் அளவு பாதியாகக் குறையும். இதனைக் கதிரியக்கப் பொருளின் அரை ஆயுள் காலம் என அழைக்கின்றனர்.

(அடுத்த வாரம் தொடரும்....)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளுக்கு அர்த்தம் இருக்கிறதா?



கனவுகள் ஏன் ஏற்படுகின்றன என்பதற்கு தெளிவான கொள்கைகள் இல்லை. பல்வேறு கருத்துரைகள், சிந்தனைகள் நிலவுகின்றன. கனவுகள் ஒருவரின் ஆழ்மனதின் வெளிப்பாடு. நாம் தூங்கும் போது, "ரெம்" (Rapid eye movement - REM) எனப்படும் கண்கள் வேகமாக அசையும் நிலையில் கனவுகள் வருகின்றன. இந்த நிலையில், உடலின் அனைத்துப் பகுதிகளும் சுயகட்டுப்பாட்டை இழந்து, முழுமையாக மூளையின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

நம்மில் பலராலும் கனவுகளை எளிதில் நினைவுபடுத்த முடியாது. தூக்கம் கலைவது தன்னிச்சையாக நடந்தால், அவற்றை நினைவுக்குக் கொண்டு வருவது சுலபமாகிவிடும். சில முக்கியமான, அடிக்கடி ஏற்படக் கூடிய கனவுகள் பற்றியும் அவற்றுக்கான பலன்களைப் பற்றியும் தெரிந்துகொள்வோம்.

**நிர்வாணமாக இருப்பது:** உங்கள் பலவீனத்தை மற்றவர் அறிந்துகொள்கிறார்கள் என்று உங்கள் உள்மனம் அச்சப்படுவதை குறிக்கும்.

**பற்கள் உடைவது அல்லது விழுவது:** ஒருவர் தங்களைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதைக் குறிக்கும்.

**குழந்தைகள் கனவில் வருவது:** அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறீர்கள் என்பதைக் குறிக்கும்.

**உறவினர்கள், நண்பர்கள் இறப்பது போல் கனவு:** இனம்புரியாத பயம் அல்லது புதிய மாறுதல் ஒன்றைக் குறித்த அச்சம் இருப்பதை இது வெளிப்படுத்துகிறது.

**கீழே விழுவது:** நமக்குக் கவலைகள் அதிகமாக இருப்பதையும் மனக்கட்டுப்பாட்டை இழப்பதையும் குறிக்கும்.

**உணவுப்பொருட்கள் கனவில் வருவது:** புத்திக்கூர்மை அடைவதைக் குறிக்கும். பொதுவாக, உணவு, நம் உடலுக்கும் மூளைக்கும் ஊட்டத்தை அளிக்கிறது.

**வீடு அல்லது கட்டடம்:** ஆழ்மனதின் எண்ணங்களைக் குறிக்கும். மேலும், ஒவ்வொரு தளம் மற்றும் அறையாக வருவது, வித்தியாசமான உணர்ச்சிகள், பழைய நினைவுகள் மற்றும் ஆழ்மனதைப் பாதித்த உண்மைச் சம்பவங்களை நினைவுபடுத்தும்.

**மிருகம் துரத்துவது:** நிகழ்காலப் பிரச்சினைகளில் இருந்து விலகி ஓடும் மனப்பான்மை உள்ளவர்களுக்கு இந்த மாதிரியான கனவுகள் வரலாம்.

**பறப்பது:** சுதந்திரம், பிரச்சினைகளில் இருந்து விடுவித்துக்கொள்ளல் ஆகியவை காரணமாக இருக்கலாம்.

**பணம்:** சுயமதிப்பைக் குறிக்கும். பணப் பரிமாற்றம் செய்வது போன்ற கனவு வந்தால், நீண்டநாள் எதிர்பார்த்த மாற்றங்கள் நிறைவேறப் போவதை அறிவுறுத்தும்.

**பாதைகள் அல்லது வெற்றுச்சாலைகள்:** வாழ்க்கைப் பயணம் செல்லும் திசையை அறிவுறுத்தும். மேலும், உங்களுடைய வாழ்க்கைப் பாதை சரியாகத்தான் செல்கிறதா? என்ற கேள்வியை எழுப்பும்.

# ஆச்சி அறிவுரை



## திருமண நிகழ்வுகளில் குத்தாட்டம்; எங்கட கலாசாரத்தை அழிக்கும் செயல்

**பேராண்டி...** ○ மாவை.நா.கஜேந்திரன்

போன கிழமை செத்தவீட்டிலை வெடி கொழுத்துறது சம்பந்தமா கதைச்சனெல்லோ, ஒரு பெரியவர் தொலைபேசி எடுத்து இந்தக் கொடுமையை முதலிலை நிப்பாட்டவேணும். பயப்பிடாமல் எழுதுங்கோ. உங்களுக்குத் துணையா நாங்கள் நிப்பம் எண்டார். எனக்கு வலு சந்தோஷம்.

அண்டைக்கு ஒரு கலியாண வீட்டை போயிருந்தன். மண்டபத்திலைதான் கலியாண வீடு நடந்தது. மண்டபக் கலியாண வீடு எண்டதும், ஒரு படத்திலை வடிவேலு சொல்லுற பகிடி நினைவுக்கு வந்தது.

கலியாண வீட்டை சிறப்பா நடத்திறதுக்கு ஏஜென்சி இருக்குது. வாசலிலை வாழை கட்டுறதிலை இருந்து வம்புழுக்கிற வரைக்கும் அந்த ஏஜென்சியே செய்யும். நாங்கள் போட்டோவுக்குப் போஸ் குடுத்தால் போதும் எண்டு சொல்லுவார் வடிவேலு.

அந்தளவுக்கு எங்கட பாரம்பரியங்களை மறந்து ஏதேதோ எல்லாம் செய்யிறம்.

மணவறையிலை மாப்பிள்ளை இருக்கிறார். ஐயர் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

திடீரெண்டு குத்துப்பாட்டு ஒன்று பாடத் தொடங்கிட்டு. மேடையைப் பார்த்துக் கொண்டிருந்த எல்லாரும் பின்னாலை திரும்பிப் பார்க்கத் தொடங்கிட்டினம். என்னெண்டு நானும் திரும்பிப் பார்த்தன். பொம்பளை மணமேடைக்கு மாலையோட வாறகாட்சி. மணப்பெண் மாலையோட நிக்கிறா. சுற்றிப் பத்து பொம்பளைப் பிள்ளையள் குத்துப் பாட்டுக்கு நடனமாடுகினம். பரத நாட்டியம் ஆடினால்கூட கொஞ்சம் ஏற்றுக்கொள்ளலாம். குத்தாட்டம் போடுறத்தை ஏற்றுக்கொள்ளலாமோ?.

இந்தக் கறுமத்தை சபையில இருந்த பலர் தொலைபேசியிலை வீடியோ பிடிக்கினம். இருவீட்டுப் பெற்றோரும் அதை ஆமோதிக்கிறது போல சிரிச்சு சந்தோசப்படுகினம்.

திருமணம் எண்டுறது இருமனங்களை ஒண்டு சேர்த்து வைக்கிற உன்னதமான தருணம்.

அதிலைபோய் இப்பிடி செய்யிறது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றில்லை.

மண்டபங்களிலை திருமணம் செய்யிறதே மடைத்தனம். சரி அதுதான் போகுறதெண்டு விட்டால், எங்கட பண்பாட்டை சிதைக்கிற செயல்களை ஏற்றுக்கொள்ளவே முடியாது. திருமண நிகழ்வுகள் களியாட்டம் தான். அதுக்காக எங்கட கலாசாரத்தை அழிச்சு, அதனூடாக வாற சந்தோஷம் என்னத்துக்குதவும்?

எங்கட இனத்தின்ற வளங்கள் பறிபோகுது. எங்கட இனத்தின்ர அடையாளங்கள் அழிக்கப்படுது. எங்கட பண்பாடு – கலாசாரங்கள் சிதைக்கப்படுது எண்டு நாங்கள் சர்வதேசத்திடம் முறையிடுறம்.

ஆனால் அதுகளை அழிக்கிறதிலை முதல் ஆக்களா நாங்களே நிக்கிறம் எண்டுறது எவ்வளவு கேவலம் தெரியுமோ?


பேராண்டி: மாற்றம் எண்டுறது தேவைதான். ஆனால் அந்த மாற்றம் எங்கட பண்பாடு – கலாசாரத்தை மாத்துறமாதிரி இருந்தால் அது எங்கட இனத்துக்கே ஈனம்.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லி எச்சம் பட்டால் வாயில் புண் வருமா?



## பல்லியின் எச்சம் முகத்தின்மீது விழுந்தால் புண் உருவாகுமா? அதற்கு எப்படிப்பட்ட சிகிச்சைகள் தேவைப்படும்?

பலரும் இந்தப் பிரச்சினையை பல்லியின் எச்சம் விழுந்ததால் உண்டான புண் என்றே தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அது பல்லியின் எச்சத்தால் ஏற்படுவது இல்லை.

இது ஒருவகையான வைரஸ் தொற்று. தமிழில் அதை "அக்கி" என்று சொல்கிறோம். பல்லியின் எச்சத்துக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இந்த வகையான வைரஸ் தொற்று ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவும் தன்மை கொண்டது. இதற்கு முறைப்படி சிகிச்சைகள் எடுக்க வேண்டியது அவசியம். உடனடியாக சருமநல மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவேண்டும்.

இந்த அறிகுறியானது சிலருக்கு உதடுகளின் அருகில் வரலாம். சிலருக்கு உடலில் வரலாம். சிலருக்கு இந்த அக்கி பாதிப்பானது ரொம்பவே தீவிரமாக இருக்கும். பொதுவாக, சர்க்கரை நோயாளிகளுக்கு இதுபோன்று தீவிரமாக இருக்கும்.


புள்ளிப் புள்ளியாக, ஒன்று சேர்ந்தது போலவும், உள்ளே நீர் கோத்தும் காணப்படும். பெரும்பாலும் வாயின் அருகில்தான் இது வரும். மருத்துவத்தில் இதை ஹெர்பிஸ் லேபியாலிஸ் **(Herpes labialis)** என்று குறிப்பிடுவோம்.

அறிகுறி தெரிந்ததும் அலட்சியம் செய்யாமல் உடனே சரும மருத்துவரின் ஆலோசனையின் பேரில் சிகிச்சை எடுப்பதுதான் இதற்கான தீர்வு.

# வெந்நீர் ஆஹா பலன்கள்!

### கழிவுகளை நீக்கும் வெந்நீர்

காலை எழுந்ததும் வெந்நீர் குடிக்கும் பழக்கம், நம் உடல் எதிர்கொள்ளும் பெரும்பான்மையான நோய்களுக்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது. வயிற்றைச் சுத்தப்படுத்துவதில், வெந்நீருக்கு இணை எதுவும் இல்லை.





வெந்நீரோ, சூடான பொருளோ நம் உடலுக்குள் செல்லும்போது, அதிகமாக வியர்க்கும் உடலின் வெப்பநிலை அதிகரிக்கும். இப்படி அதிகரித்த வெப்பநிலையைக் குறைத்து, நம் உடல் வெப்பத்தை சமநிலையில் வைத்திருக்கத்தான் வியர்வை உற்பத்தியாகிறது. இதனால், நம் உடலின் செல்களில் உள்ள நீர், உப்பு முதலான கழிவுகள் வெளியேறுகின்றன.

### வெந்நீர் குடிக்க உகந்த நேரம்

எல்லா நேரமும் வெந்நீர் அருந்தலாம். இருப்பினும், அதிகாலையில் அருந்துவது மிகவும் நல்லது. அதிகாலையில், வெந்நீரை ஆற்றும்போது, காற்றில் கலந்திருக்கும் ஓசோன் வாயு, வெந்நீருடன் கலக்கும். ஓசோன் என்பது, சூப்பர் ஆக்சிஜன். அது நம் உடலின் சக்தியைத் தூண்டிவிடும். சாப்பிடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு குடித்தால், செரிமானத்தைத் தூண்டும்.

### செல்கள் புத்துணர்வு பெறும்

வெந்நீர் அருந்தும்போது, இரத்தக் குழாய்கள் விரிவுபடுத்தப்படும். இதனால், உடல் முழுக்க நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கும். செல்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் ஆக்சிஜன் சீராகக் கிடைக்கும். செல்கள் புத்துணர்வுடன் இருக்கும். இதனால் நம் உடல், பலவிதமான தீங்கு விளைவிக்கும் நோய்களில் இருந்தும் தன்னைத் தற்காத்துக் கொள்கிறது.

போதுமான அளவு வெந்நீர் அருந்திவந்தால் சருமம் பொலிவடையும்.

# காளான் பீட்சா

## சமைப்போம் சுவைப்போம்



### தேவையானவை :

ஈஸ்ட் – ஒன்றரை டீஸ்பூன்
சர்க்கரை – 2 டீஸ்பூன்
காளான் – 200 கிராம்
கோதுமை மா – 200 கிராம்
உப்பு – ஒரு டேபிள்ஸ்பூன்
வெஜிடபிள் ஆயில் – 2 டேபிள்ஸ்பூன்
குடமிளகாய் – 2 (நறுக்கவும்)
தக்காளி – 2 (நறுக்கவும்)
வெங்காயம் – 2 (நறுக்கவும்)
பீட்சா சாஸ் – 4 டேபிள்ஸ்பூன்
துருவிய சீஸ் – 2 கப்
வெண்ணெய் – சிறிதளவு



காளான் பிசுபிசுப்பாக மாறிவிட்டால் பயன்படுத்தக் கூடாது.

### செய்முறை

முதலில் சர்க்கரை, ஈஸ்ட் ஆகியவற்றை ஒரு கப் வெதுவெதுப்பான நீரில் கலந்து ஈஸ்ட்டை ஆக்டிவேட் செய்ய வேண்டும். 10 நிமிடங்கள் இதை மூடிவைத்தால் நன்கு நுரைத்து வந்திருக்கும். கோதுமை மாவுடன் ஒரு டேபிள்ஸ்பூன் உப்பு, 2 டேபிள்ஸ்பூன் எண்ணெய், சேர்த்து ஈஸ்ட் கலந்த நீரை ஊற்றி பரோட்டா மா பிசைவது போல் நன்றாக அடித்துப் பிசைய வேண்டும். மாவின் மேற்பரப்பில் எண்ணெய் தடவி ஈரத் துணியால் மூடி மூன்று மணி நேரம் ஊறவைக்கவும். பிறகு மீண்டும் நன்றாகப் பிசைந்து பேக்கிங் பான் **(Baking Pan)** மேற்புறத்தில் வெண்ணெய் தடவி பான் சைஸுக்கு மாவை சீராகப் பரப்பிவிடவும். அதன் மேல் பீட்சா சாஸ் ஊற்றி சீராகப் பரப்பவும். ஒரு கப் துருவிய சீஸ் பரப்பவும். அதன் மேல் நறுக்கிய வெங்காயம், காளான், குடமிளகாய், தக்காளியைப் பாங்காக அடுக்கி, அதன் மேல் ஒரு கப் துருவிய சீஸை அடர்த்தியாகப் பரப்பவும். இதை பிரீஹீட் செய்யப்பட்ட அவனில் (oven) 250 டிகிரி செல்ஷியஸ் வெப்பத்தில் 25 நிமிடங்கள் வைத்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இருப்பது ஞாபக மறதியா? வியாதியா?





இவை எல்லாம் உங்களுக்கு நடந்திருக்கிறதா என யோசியுங்கள்.

"ஆபீஸுக்கு இன்றைக்கு என்ன ட்ரெஸ் போடலாம்?" என யோசித்துக்கொண்டே செல்போனை மறந்து வைத்திருப்போம்.

எதையோ எடுக்க ஒரு ரூமுக்குப் போய், "இப்போது எதற்கு இங்கே வந்தோம்?" என யோசித்துக் கொண்டிருப்போம்.

தலையிலேயே சீப்பை வைத்துவிட்டு, சீப்பு எங்கே எனத் தேடிக்கொண்டு இருப்போம்.

பாக்கெட்டில் வைத்துக்கொண்டே பர்ஸை தேடிக் கொண்டிருப்போம்.

அடுத்தவர் சொல்வதை "உம்" கொட்டியபடி கேட்டுக்கொண்டே இருப்போம். ஆனால், அவர் சொன்னது எதுவுமே மனதில் பதியாது. "ஸாரி... என்ன சொன்னீங்க?" எனக் கேட்டு அசடுவழிவோம்.

"வீட்டுக் கதவை நன்றாகப் பூட்டினோமா?" என, வரும் வழியெல்லாம் யோசித்துக்கொண்டே வருவோம்.

இவை வழக்கமாக நடக்கும் விடயங்கள். இது போன்ற மறதி, கவனக்குறைவு பெரும்பாலானவர்களுக்கு உள்ளது. எதனால் இப்படி ஏற்படுகிறது? இது ஏதும் பிரச்சினையா? இதைத் தடுப்பது எப்படி?

பொதுவாக, மறதி என்பது நல்ல விடயம். எதையுமே மறக்கவில்லை என்றால், வாழ்க்கை சந்தோஷமாக இருக்காது. மனித மூளைக்குத் தினமும் இலட்சக்கணக்கான தகவல்கள் சென்று கொண்டே இருக்கின்றன. இவற்றில் மூளை தனக்குத் தேவையானதை நினைவில் வைத்துக் கொண்டு, தேவையற்றதை மறந்துவிடுகிறது.

மறதிக்கு பல காரணங்கள் உள்ளன. ஒரு விடயத்தை மறக்கிறோம் என்றால், அதற்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை என்று அர்த்தம். ஒரு தகவல் நம் மனதில் பதிவாகும் போது, வேறு ஏதாவது கவனச்சிதறல் இருந்தால், அது நம் மூளையில் பதிவது இல்லை. மனஅழுத்தம், மனச்சோர்வு, சூழல் நெருக்கடி, தூக்கமின்மை, மது, சிகரெட் பழக்கம் என கவனச்சிதறலை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் காரணமாக மறதி ஏற்படுகிறது.

நினைவுத்திறன் என்பது ரிமோட், ரீசன்ட், இம்மீடியட் என மூன்று வகைப்படும். ரிமோட் - இது பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததை நினைவுகூர்வது.

ரீசன்ட் - நேற்று அல்லது கடந்த வாரம் நடந்ததை நினைவில் கொள்வது.

இம்மீடியட் - கடந்த நிமிடம் நடந்தது, இப்போது செய்யப்போவது போன்றவற்றை உடனுக்குடன் நினைவில்கொள்வது.

இதில் "இம்மீடியட் மெமரி" என்பது, செய்யும் செயலில் முழுக்கவனமும் ஆர்வமும் இருந்தால் மட்டுமே நம் மனதில் பதியும். கவனச்சிதறல் இருக்கும்போது, பதிவாகாது.

எந்த ஒரு சம்பவத்தையும் அப்போது நிகழ்ந்த, நிகழும் மற்றொரு சம்பவத்துடன் தொடர்புபடுத்தி நினைவில் கொள்ளுங்கள்.

செய்ய நினைக்கும் விடயங்களைக் கவனத்துடன் கேளுங்கள். கூடுமானவரை எழுதி வைப்பதைத் தவிருங்கள். பின்னர், மனம் அதையே நாடும். உங்கள் ஞாபகசக்தி மீது உங்களுக்கே நம்பிக்கை குறைந்து போகும்.

நினைவுபடுத்த வேண்டிய விடயத்தை, மனதுக்குள் ஆழமாக மூன்று நான்கு முறை சொல்லிக் கொள்ளுங்கள். இது, சட்டென்று நமக்குத் தேவையான போது ஞாபகப்படுத்தும்.

எவ்வளவு முடியுமோ, அவ்வளவுக்கு மனதில் குறித்து வைக்க வேண்டும். தொடக்கத்தில் மட்டும் ரிமைண்டர் ஆப்ஸ் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

பழைய நல்ல விடயங்களை நினைத்துப் பாருங்கள். அவற்றுடன் சம்பந்தப்பட்ட நபர்கள், இடங்கள், திகதி போன்றவற்றையும் நினைவுகூர முயற்சி செய்யலாம்.

கணக்கு தொடர்பான புதிர்கள், விளையாட்டுகளைப் பொழுதுபோக்காகச் செய்து வந்தால், நல்ல மாற்றம் தெரியும்.

ஷாப்பிங்குக்காக வெளியே செல்லும்போது, லிஸ்ட்டை பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, நீங்களாக ஞாபகப்படுத்தி பொருள்களை வாங்குங்கள். இறுதியாக செக் செய்யுங்கள்.

குறைந்தது ஐந்து பேரின் எண்களாவது நினைவில் இருக்கட்டும். இது, உங்களுக்கு ஞாபகசக்தியைக் கொடுப்பதோடு, அவசரத்தில் கை கொடுக்கும்.

ஸ்போர்ட்ஸ், நடைப்பயிற்சி, வீட்டு வேலை என உங்களைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் நினைவுத்திறன் நன்றாக இருக்கும். "ஞாபக மறதி வியாதி கிடையாது" என்று முடிக்கிறார் மனநல மருத்துவர் அசோகன்.

# தெளிவே என் சிந்தனையுள்... 16

ஓரிடத்தில் மூவருக்கு வேலை வழங்கப்பட்டது. கிடங்கு கிண்டி, மரம் நாட்டி, அதற்கு தண்ணீர் விடவேண்டும். இதுவே வேலை.

இந்த மூன்றையும் ஒவ்வொருதர் செய்வதாய் ஒழுங்குபடுத்தப்பட்டது.

அதாவது, ஒருவர் மரம் நாட்டுவதற்கான குழியை தோண்ட வேண்டும், மற்றவர் அந்தக்குழியில் மரத்தை நாட்ட வேண்டும். இறுதியாள் நாட்டப்பட்ட மரத்திற்கு நீர் இறைக்க வேண்டும்.

குழி தோண்டியவர் தன் பணியை முடித்து விட்டார், மரம் நாட்டுபவர் அவ்விடத்தே வரவில்லை. ஆதலால் மரம் நாட்டப்படவில்லை. மூன்றாமவர் வந்தார். மரம் நாட்டப்படாத கிடங்கில் மண்ணை மூடிவிட்டு, அந்த வெறும் கிடங்கில் நீர் இறைத்து விட்டுச் சென்றார்.

அன்பானவர்களே! எம்மில் பலர் இவ்வாறான வேலைகளையே செய்கிறார்கள்.

ஒரு காரியம் எதற்காக எம்மிடம் தரப்பட்டது என்ற பூர்வாங்க அறிவில்லாமல் எனக்குத் தரப்பட்ட வேலை எதுவோ அதையே செய்வேன் என்று அறுதியாய் இருப்பார்கள்.

நாம் எவ்வளவுதான் கஸ்ரப்பட்டு வேலை செய்தாலும் எமக்கு நல்ல பெயர் கிடைப்பதில்லை.

நாம் செய்யும் வேலைக்கான ஊதியமும் கிடைப்பதில்லை என்று மனக்குறைபடுவார்கள்.

எமக்கு வழங்கப்பட்ட பணி எத்தகையது? அதன் தன்மை என்ன? நான் அதை பூரணமாகச் செய்கின்றேனா?

அந்த வேலைக்கு நான் தகுதியானவரா? என்ற கேள்விகளை உங்களை நீங்களே கேளுங்கள்.

உங்கள் பணியிடத்தில் உங்கள் பணியின் முக்கியத்துவம் என்ன என்பதையும் அதில் எனது வகிபாகம் என்ன என்பதையும் புரிந்துகொள்வீர்கள்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

61

செங்கை ஆழியான்

பின்னர் இந்த வாயிலை உடைத்துக்கொண்டுதான் ஸ்ரீ லங்கா இராணுவம் கோட்டையைவிட்டுத் தப்பி ஓடியது. லொறி சிதறியது முயற்சி வெற்றியளிக்கவில்லை. கோட்டையிலிருந்து ஷெல்கள் பறந்தன. யாழ்ப்பாண மக்கள். ஆஸ்பத்திரி நோயாளர் அனைவரும் மூட்டை முடிச்சுக்களுடன் இடங்களை விட்டு வெளியேறினர்.

(இந்நிகழ்வின் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்தில் குண்டு வெடிப்புச் சத்தம் ஓயவில்லை. விடுதலைப் புலிகள் யாழ்.கோட்டையைச் சுற்றி ஒன்பது காவலரண்களை அமைத்திருந்தனர். முதலாவது காவலரண் பண்ணைச் சந்தியில் திறந்த வெளியில் துணிச்சலுடன் அமைக்கப்பட்டு, சுரங்கப் பாதை மூலம் பண்ணைப் பொலிஸ் நிலைய வீடுகளுடன் இணைக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது காவலரண் தொலைத்தொடர்பு நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இதனைப் பெண் புலிகள் நிர்வகித்தனர். மூண்றாவது காவலரண் கொட்டடி இடுகாட்டிலும், நான்காவது காவலரண் பெரிய தபாற்கந்தோர் கட்டடத்திலும், ஐந்தாவது காவலரண் வீரசிங்க மண்டபக் கட்டடத்திலும். ஆறாவது காவலரண் திறந்த வெளியரங்கிலும், ஏழாவது காவலரண் கோட்டைக்கு மிக அருகில் துரையப்பா ஸ்ரேடியத்திலும், ஒன்பதாவது காவலரண் யாழ் பொலிஸ் நிலையத்திலும் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றினை விட கோட்டையைச் சுற்றியுள்ள அனைத்துக் கட்டடங்களிலும் புலிகள் காவலிருந்தனர். வடகுப் பக்க காவலரண்களிலிருந்து யாழ்ப்பாண நகரத்திற்கு நிலத்தினடியாக வரக்கூடியளவிற்கு எலிவளைகளான சுரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன இக்காவலரண்களோடு சேர்ந்த முற்றுகையை யாழ்ப்பாண மாவட்டத்தளபதி பாணு வழி நடத்தினார்.

போர்த்துக்கேயர் ஆயிரம் பேர் வரையில் கோட்டைக்குள் அசுப்பட்டிருக்க ஒல்லாந்தப்படைகள் யாழ் சோட்டையை முற்றுகையிட்ட வரலாற்று நிகழ்வை விடுதலைப்புலிகளின் முற்றுகை நினைவூட்டியது. கோட்டைக்கு இருப் போருக்கு வெளியிலிருந்து உணவு.


மருந்து, ஆயுதங்கள் எதுவும் செல்லாது தடுப்பதன் மூலம் சரணடைய வைப்பதற்காக ஒல்லாந்தக் கொமுசாறி வன் கோயன் செய்த அதே யுக்தியை தளபதி பாணு நடமுறைப்படுத்தினார்.

யாழ் கோட்டை முற்றுகையை முறியடிப்பதற்காக ஸ்ரீலங்கா இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளும் சேர்ந்து கூட்டாகத் தம் முழுப்பலத்தையும் பிரயோகித்தன. தினமும் யாழ்ப்பாண நகரத்தின் மேல் வந்த விமானங்கள் ஓய்வு ஒழிச்சலின்றிக் குண்டு மாரி பொழிந்தன. புலிகளின் காவலரண்களைத் தகர்த்தெறிவதற்காக தம் முழுப் பலத்தையும் பிரயோகித்தன.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்

இரண்டாம்பாகம்



காலத்தின் பதிவு- 156

# கடற்புறா

ஒவ்வொரு முறையும் அவன் உத்தரவிட்டபோதும் அதை ஒப்புக்கொள்ளும்படி ஏதோ ஓர் இனம் புரியாத அபூர்வ சக்தி ஒன்று அவர்களை உந்தவே செய்தது. குடிவெறியில் உளறலுடன் உத்தரவுகள் வெளிவந்தபோது இடையிடையே திடீரெனக் கண்களில் தெரிந்த ஈட்டிப் பார்வைகள் உத்தரவை மீறுவது பெரும் அபாயம் என்பதை எச்சரிக்கை செய்தன. தடுமாறிய சமயங்களிலும் இடையிடையே சுறீல் சுறீலென உதிர்ந்த சொற்கள் மேலுக்கு அர்த்தமற்றவைபோல் தெரிந்தாலும் உண்மையில் பொருள் உள்ளவை என்பது புலனாயிற்று. ஆகவே, படைத்தலைவன் இடும் எந்த உத்தரவையும் தீவிரமாக எதிர்க்காமல் அக்ஷய முனை வாசிகள் நிறைவேற்றியே வந்தார்கள். படைத்தலைவன் அன்றாடம் பிறப்பித்து வந்த உத்தரவுகளையும் அவற்றை நகர மக்களும் மற்றோரும் முழுமூச்சுடன் நிறைவேற்றி வந்ததையும் ஒற்றர்கள் மூலமும் நேரிலும் அறிந்த பலவர்மன், "இந்தப் பைத்தியக்கார உத்தரவுகளை எதற்காக நிறைவேற்றுகிறார்கள்?" என்று பலமுறை தன்னைத்தானே கேட்டுக்கொண்டு விடை காணாமல் தவித்தான். அமாவாசை தோன்றுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பே இளையபல்லவன் மரக்கலம் பூரணமாகப் பழுது பார்க்கப்பட்டுப் புது உருப் பெற்று அக்ஷயமுனையை விழுங்க வந்திருக்கும் அசுரப்பறவை போல் நின்றதைக் கண்டு பெரிதும் கலங்கிய பலவர்மன், அதை நீரில் மிதக்க விட வேண்டாமென்று கரையில் இழுத்தது இழுத்தபடியே கிடக்கட்டுமென்று படைத் தலைவன் பிறப்பித்த உத்தரவைக் கேட்டு, பெரும் நிம்மதியடைந்தானென்றாலும், அந்த உத்தரவை இளைய பல்லவன் சுயபுத்தியோடு பிறப்பித்தது மட்டும் பெரிய வியப்பையே கொடுத்தது அக்ஷய முனைக் கோட்டைத் தலைவனுக்கு.

அந்த உத்தரவைத் தன் முன்னிலையிலே பிறப்பிக்கப்பட்டது. விந்தையிலும் விந்தையாயிருந்தது. அந்த வஞ்சகனுக்கு. இளையபல்லவனும் அமீரும் நடவடிக்கைக்குத் திட்டமிட்ட இரவிலிருந்து ஒன்பதாவது நாள் மாலையில் நடந்த நிகழ்ச்சி அது. அந்த நிகழ்ச்சி உண்மையில் பெரும் மகிழ்ச்சியையே பலவர்மனுக்கு அளித்தது.

அமாவாசை இருள் கவிய அடுத்து ஐந்து நாட்கள் இருந்த அந்த மாலை நேரத்தில் அக்ஷய முனைக் கோட்டையை நோக்கி ஒரு கண்ணையும், கடலின் பெரும் நீர்ப்பரப்பை நோக்கி மற்றொரு கண்ணையும், காட்டிக் கொண்டு பெரும் இறக்கைகளுடனும், சற்றே மழுங்கிய பின் பகுதியின் காரணமாகப் பயங்கரத்துடன் அழகையும் இணைத்துக் கொண்டு நின்ற அந்தப் பெரும் மரக்கலத்தை நோக்கி இளைய பல்லவன் நடந்து செல்வதை உப்பரிகையிலிருந்து கவனித்த பலவர்மனும் அந்த மரக்கலத்தால் கவரப்பட்டவனாகி உப்பரிகையிலிருந்து இறங்கிக் காவலரையும் அழைத்துக் கொள்ளாமல் தனது புரவியிலேறிக் கடற்கரையை நோக்கிச் சென்றான்.

கடற்கரையை நோக்கியிருந்த கோட்டை வாசலுக்கு வந்ததும் கொம்புகளை ஊத எடுத்த காவலரையும் வேண்டாம் என்று சைகை செய்து, புரவியிலிருந்து இறங்கி எந்த ஆடம்பர அறிவிப்புமின்றிக் கடற்கரை மணலில் நடந்து மரக்கலம் இருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அவன் செல்வதை, கடற்கரைக் கொள்ளையரும் நோக்கியதால் அவர்களில் சிலரும் அவனைத் தொடர்ந்து சென்றார்கள். பலவர்மன் முன் செல்ல, பின்னால் கொள்ளையர் தொடரச் சென்ற கூட்டம் மரக்கலமிருந்த இடத்துக்கு வந்ததும் மரக்கலத்தை நோக்கிக் கொண்டிருந்த இளையபல்லவன் நீண்ட நேரம் மட்டும் அவர்கள் யாரையும் கவனிக்காமல் மரக்கலத்தையே நோக்கிக் கொண்டு நின்றான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகம் 10: தனுஷ்

**1.** வீட்டிலும் காரிலும் "ஓம் நமசிவாய" இசையாக வழிந்தோடினால் தனுஷ் இருக்கிறார் என்று அர்த்தம். இஷ்ட தெய்வம் சிவன். குலதெய்வம் கருப்பசாமி மீதும் அலாதி நம்பிக்கை உண்டு. கஸ்தூரி அம்மா, மங்கம்மா தரிசனமும் உண்டு. மனசு சரியில்லையென்றால் கருப்பசாமி கோயில் பிராகாரத்தில் உட்கார்ந்து எழுந்தால் சரியாகி விடும் என நினைப்பார்.

**2.** "ஜிம்தான் அந்த நாளை முழுமை பெற வைக்கும்" என்பார். நள்ளிரவு இரண்டு மணிக்கு ஷூட் முடிந்தாலும், வியர்க்க விறுவிறுக்க உடற்பயிற்சி செய்துவிட்டுத்தான் உறங்கப் போவார்.

**3.** சுத்த சைவம். சோறு, பூண்டுக் குழம்பு, அப்பளம் பிடித்த உணவு. பச்சை மொச்சைப் பயறு குழம்பு, உருளைக்கிழங்கு வறுவலும் விருப்ப உணவுப் பட்டியலில் இடம்பிடித்திருக்கிறது.

**4.** தனுஷுக்கு ரெகுலர் சினிமா செய்யக்கூடாது என்பதுதான் எண்ணம். "நம்மிடம் இருந்து எது வேண்டுமானாலும் வரும் என ரசிகர்கள் தயா ராக இருக்க வேண்டும்" என்பார். ரசிகர்களிடம் எப்பவும் சொல்கிற வார்த்தைகள் "எண்ணமே வாழ்க்கை, எண்ணம் போல் வாழ்க்கை!"

**5.** அம்மாப் பிள்ளை. அப்பா இயக்குநர் கஸ்தூரிராஜா மீது மிகுந்த மரியாதை உண்டு. எந்தப் பிரச்சினைக்கும் அம்மா சொல்வது தான் வேதவாக்கு. மருத்துவம் படித்த விமல கீதா, கார்த்திகா தேவி என்ற இரண்டு சகோதரிகளும், இன்ஜினீயரிங் முடித்த சகோதரர் செல்வராகவனும் இருக்கிறார்கள். விடுமுறை தினங்களில் எல்லோரும் ஒன்றுகூடுவார்கள். சிரிப்பும் களிப்புமாக நாட்கள் கழியும். எல்லோருக்கும் அம்மாதான் தொடர்பாளர்!

**6.** பிடித்த உடை நான்கு முழ வேட்டியும் அரைக்கைச் சட்டையும்தான். கழுத்தில் 110 வயது சாமியார் ஒருவர் கொடுத்த ருத்ராட்ச மாலையையும், தாத்தா வைத்துவிட்டுப் போன பாசி மாலையையும் அணிந்திருக்கிறார்.

**7.** தனுஷ் ஒரு குடும்பப் பறவை. படப்பிடிப்பு இல்லையென்றால் யாத்ரா, லிங்கா மற்றும் சகோதரிகளின் குழந்தைகளோடு நேரத்தைச் செலவிடுவார். கிரிக்கெட், ஸ்னூக்கர் ஆட்டத்தின் ஆரவாரத்தில் வீடே கலகலக்கும்.

**8.** தனுஷின் சொந்தப் பெயர் வெங்கடேஷ் பிரபு. வீட்டில் செல்லமாக அழைப்பது பிரபு. தமிழ் சினிமாவின் இந்திய அடையாளமாக இருந்தாலும் தனுஷ் படித்தது பிளஸ்-டூ தான். பிரிட்டனும், அதன் தலை நகர் லண்டனும் ரொம்ப பிடித்த நாடும் நகரமும். "செட்டில் ஆக வேண்டும் என்றால் இங்கே வந்துவிட வேண்டும்!" என்பார். பயணிக்க "டொயோட்டா வெல்பயர்" வாகனம் பிடிக்கும். எப்போதாவது "இனோவா"விலும் செல்வார்.

**9.** தமிழில் பிடித்த நடிகர்கள் சிவாஜி, ரஜினிகாந்த். மனோரமா உடன் சேர்ந்து நடிக்கவில்லையே என்ற தீராத மனக்குறை உண்டு. காமெடியில் கவுண்டமணியை ரொம்பப் பிடிக்கும்.

**10.** இளையராஜாவின் தீவிர ரசிகர். அவர் பார்க்க நினைத்தால் அடுத்த நிமிடமே போய் ஆஜராகி விடுவார். இளையராஜாவின் இசையின் நுணுக்கங்களைப் பற்றி நேரம் போவது தெரியாமல் பேசுவார்.

# சினிமா



அனுஷ்கா கம்பேக் கொடுக்கிறார். தேர்ந்தெடுத்து சில படங்களில் நடிக்கலாம் என முடிவெடுத் திருக்கிறார். கிரிஷ் ஜகர்லமுடி இயக்கத்தில் அவர் நடித்த "காட்டி" திரைப்படத்தை ஜூலை முதல் வாரத்தில் வெளியிட முயற்சி செய்கிறார்கள். ரொமான்ஸும் ஆக்ஷனும் கலந்த கதையாம்! இந்தப் படத்தின் ரிசல்ட்டைப் பார்த்த பிறகு தமிழ், தெலுங்கு என அடுத்த மூவ் பற்றி முடிவெடுக்க உத்தேசித்திருக்கிறார் அனுஷ்கா. வெல்கம் பேக் அனுஷ்!



"வணங்கான்" படம் எதிர்பார்த்த அளவுக்குப் போகாத காரணத்தால் திரைக்கதையில் நிறைய மினக்கெட்டு புதுக்கதையை உருவாக்கி வருகிறார் பாலா. சூர்யா அல்லது அதர்வா நடிக்க குறுகியகாலத் தயாரிப்பாக படம் இருக்கும் என்றும், மதுரையை மையமாக வைத்த கதை என்றும் சொல்கிறார்கள். இரத்தம் தெறிக்கத் தெறிக்க ஒரு காவியமா..?



தொடர்ந்து குடும்பப்பாங்கான படங்களில் நடித்துவருகிறார் மணிகண்டன். இப்போது அவர் வசம் மூன்று படங்கள் உள்ளன. எல்லாமே வெவ்வேறு கதைக்களம் கொண்ட படங்கள் என்பதால் மணிகண்டன் படு உற்சாகத்தில் இருக்கிறார். கூடவே, ஒரு படத்தை இயக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கும் அவர், அதற்கான ஸ்கிரிப்ட் தயாரிக்கும் பணியையும் தொடங்கியுள்ளாராம்.



"லக்கி பாஸ்கர்" பட புகழ் வெங்கி அட்லூரி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் "சூர்யா 46" படத்தின் பூஜை, ஹைதராபாத்தில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, தன்னுடைய விருப்பத்துக்காக பழனி கோயிலிலும் ஒரு பூஜையைப் போட்டுள்ளார் சூர்யா. "24" மற்றும் கமலின் "விக்ரம்" ஆகிய இரண்டு படங்களில்தான் இதுவரை சூர்யா நெகட்டிவ் ரோலில் நடித்திருக்கிறார். அடுத்ததாக, தற்போது பூஜை போடப்பட்டிருக்கும் "சூர்யா 46" படத்திலும் ஒரு நெகட்டிவ் ரோல் இருக்கிறதாம். மிகக்குறுகிய காலத் தயாரிப்பாக படம் உருவாகி வெளிவரும் என்று கூறப்படுகிறது.



அடுத்த அதிரடிக்கு ரெடியாகிவிட்டார் இயக்குநர் பொன்ராம். "வருத்தப்படாத வாலிபர் சங்கம்", "ரஜினி முருகன்" என பல படங்களைக் கொடுத்தவர், இப்போது கப்டனின் மகன் சண்முகபாண்டியனை வைத்து "கொம்பு சீவி" என்ற படத்தை இயக்கியுள்ளார். இதன் நிறைவு நாள் படப்பிடிப்பில் யூனிட்டில் உள்ள அத்தனை பேருக்கும் பிரியாணி விருந்து வைத்து, ஆடைகளையும் பரிசாகக் கொடுத்து அசத்திய சண்முக பாண்டியன், "கடுமையாக உழைத்த குழுவினருக்கு என்னால் முடிந்த சிறிய அன்பளிப்பு இது" என்று சொல்லிப் பூரித்துள்ளார்.



இயக்குநராக ஓ.டி.டி-யிலும் களமிறங்கிவிட்டார் நடிகை ரேவதி. ஹிந்தியில் கஜோல் நடிப்பில் வெளியான **'The trial pyaar kaanoon dhokha'** வெப்சீரிஸை, தமிழுக்குக் கொண்டு வந்திருக்கிறார் ரேவதி. பிரியாமணி, சம்பத்ராஜ் நடிக்கும் இந்த சீரிஸுக்கு "குட் வொஃய்ப்" என்று டைட்டில் வைத்திருக்கிறார்கள். "இந்த சீரிஸில் கதாநாயகி ரோல் மிகவும் வலுவானது. நிறைய சவால்களை ஹீரோயின் எதிர்கொள்கிறார். அதனால்தான் மிகவும் விரும்பி இயக்கியுள்ளேன்" என்கிறார் ரேவதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல்
451
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# எமக்கு ஏற்படும் கோபத்தை என்ன செய்யலாம்?

நாம் கோபப்படுவது என்பது மிகவும் ஆபத்தானது. இது, எம்முடைய மனநிலையையும் குழப்பி, மற்றவர்களின் மனநிலையையும் குழப்பி, எம்மை நோயாளியாக்கி மற்றவர்களையும் நோயாளியாக்கும் அளவிற்கு ஆபத்தானதாகும். இந்த கோபம் என்பது ஒரு சமூக நோயாக உணரப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் கோபப்படும் போது நாம் தோற்று விடுகிறோம். எம்மை கோபப்படுத்திய அந்த சூழ்நிலை, எம்மை வெற்றி கொள்கிறது. கோபப்படும் நிலையில் எமது புத்திக்கூர்மை மங்கி, சாதுரியம் குன்றி, மனதாலும் உடலாலும் ஒரு பிழையான தீர்மானத்தை எடுக்கக்கூடிய அளவிற்கு பலவீனமான நிலைக்கு தள்ளப்படுகின்றோம். இதைத்தான் "ஆத்திரகாரனுக்கு புத்தி மட்டு" என நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். பொதுவாக, நாம் பலவீனமான நிலையில் இருக்கும் போது, இலகுவில் கோபப்படக்கூடியவர்களாக இருக்கிறோம். உதாரணமாக, நாம் பசியுடன் இருக்கும் போது, களைப்பாக இருக்கும் போது, நோய்வாய்ப்பட்டு இருக்கும் போது அல்லது நித்திரை குழப்பத்தில் இருக்கும் போது நாம் இலகுவில் கோபப்படக்கூடியவர்களாக இருக்கிறோம். அதாவது, கோபமானது பலவீனத்தின் வெளிப்பாடு ஆகும். எமது, கோபத்தினால் பிறரை அடக்கி வைப்பது உண்மையில் பலமான ஒரு செயல் அல்ல. கோபமான சூழ்நிலையிலே எம்மையும் எம் நாவையும் அடக்கிக் கொள்வது தான் உண்மையான மனோபலம் என்று அறியப்படுகிறது.

நாய்க்கு கூட கோபம் வரும். இதில், நமக்கு கோபம் வருவதில் என்ன கெட்டித்தனம் இருக்கிறது என நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலங்குகளுக்கு சிரிக்கத் தெரியாது, சிந்திக்க தெரியாது. இவை தான், மனிதனுக்கு காணப்படும் தனித்துவமான பண்புகள் ஆகும். சிலரைத் தவறாக புரிந்து கொண்டு, கோபப்பட்டு பிரிந்து விடுகிறோம். வேறு சில தவறானவர்களை நாம் சரியாக புரிந்து கொள்ளாமல், அவர்களுடன் நெருங்கி பழகி, இறுதியில் கோபப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவை அனைத்தும் எமது அறியாமையின் வெளிப்பாடு ஆகும்.

கோபத்தை கையாள, நாம் பல விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. கற்றல் என்பது புத்தககல்வி மட்டுமல்ல. எமது நாளாந்த வாழ்வை, பல இடையூறுகளுக்கிடையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, காலம் எமக்கு பலவற்றை கற்றுத்தரும். எம்மை மீறி ஏற்படும் கோபம், இழப்புகள், தோல்விகள், வறுமை, பசி கூட எமக்கு பலவற்றை கற்றுத்தருகிறது. இவற்றினால் ஏற்படும் அனுபவ முதிர்ச்சி எமக்கு, கோபத்தைக் கையாளும் வல்லமையை கற்றுத் தருகிறது. எமக்கு பல சிக்கல்கள் ஏற்படுவதற்கு, எமது கோபப்படும் தன்மையும், வாதிடும் தன்மையுமே அடிப்படையான காரணங்களாக இருக்கின்றன. ஒரு விடயத்தை உணரக்கூடிய திறமைசாலிகளிடம் மட்டும் வாதிட்டு, எமது கருத்தை வலியுறுத்துவதே நல்லது. அவ்வாறானவர்கள் அல்ல என்று நாம் கருதுபவர்களுடன் வாதிடுவதனால், எதிர்மறையான விளைவுகளே ஏற்படும். இதனால், நாமும் நொந்து, மற்றவர்களையும் காயப்படுத்தக்கூடிய நிலை ஏற்படுகின்றது.

நாம் அமைதியாக இருப்பதால், ஒரு விடயத்தை ஆமோதிக்கிறோம் என்று அர்த்தமல்ல. நாம் பேசி பயனில்லை என்று கருதும் போது அல்லது உண்மை புரிவதற்கு காலம் கனிய வேண்டும் என்ற நிலை இருக்கும் போது, அமைதியாக இருப்பதே பொருத்தமான ஒரு செயலாகும். வாழ்விலே எமக்கு ஏற்படும் ஒவ்வொரு இடையூறுகளுடனும் நாம் மோதிக்கொண்டிருக்க முடியாது. நம்மை துரத்தி வரும் நாய்கள் ஒவ்வொன்றிற்கும் நாம் கல் எறிந்து துரத்த முயன்றால், எம் இலக்கை அடைய முடியாது. எம் ஒவ்வொருவரினதும் வாழ்க்கை பயணத்தின் போதும் நிச்சயமாக பல கல்லடிகள் விழும். அந்த கற்களை திருப்பி எடுத்து எறிந்து கோபப்படுவது அர்த்தமற்றது. அது புத்திசாதுரியமும் ஆகாது. எனவே, அந்த கற்களைக் கொண்டே நாம் நமது பாதையை செப்பனிட வேண்டும். அதாவது, எமக்கு ஏற்படும் ஒவ்வொரு இடையூறுகளையும் எமக்கு சாதகமாக மாற்றுவது எப்படி என்பதை கற்றுக்கொள்ள வேண்டும். இதன்போது, கோபப்படுவது என்பது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே, அவர்களது தனித்துவ குணாதிசயங்களோடு கேட்டுக்கொண்டு, ஏற்றுக்கொண்டு பயணிக்க பழக்கப்பட வேண்டும். கோபப்படுவதால் என்ன நன்மைகள் ஏற்படுகின்றன என சிந்திப்போமானால், பதிலடி கொடுத்தோம் என்ற குரூர மனதிருப்தியை விட வேறு எதையும் பெற்றுவிட முடியாது. இதனால், நாம் பல நண்பர்களை இழந்து விடுகிறோம், பல உறவு கள் முறிந்து போகின்றன, எமது ஆளுமை அற்றுப் போகின்றது, எமது நேரம் விரயமாகிறது. இத னால், பலர் பல துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் இது எம்மில் பல சுகாதார பிரச்சினைகளையும் ஏற்படுத்தி நிற்கிறது. உதாரணமாக, உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், மாரடைப்பு, மனக்குழப்பங்கள் போன்ற பல சுகாதார பிரச்சினைகளை எமக்கு இந்த கோபம் ஏற்படுத்துகிறது. எமது கோபம் மாறிய பின், நாம் செய்த தவறுகளை எம்மால் பலதடவை உணரக் கூடியதாக இருக்கிறது. ஒரு சில சமயங்களில் இது காலம் கடந்து உணரக் கூடியதாகவும் இருக்கிறது. எனவே, நாம் கோபப்படுவதை குறைத்துக் கொள்வது எவ்வாறு என சிந்திப்பதிலே அக்கறை செலுத்த வேண்டும். கோபத்தை குறைத்துக்கொள்ளும் முயற்சிகளிலே ஆர்வம் காட்ட வேண்டும். எந்தெந்த வழி முறைகள் மூலம் கோபத்தை குறைத்துக்கொள்ளலாம் என்பது சம்பந்தமாக சிந்தித்து, அவற்றை நடைமுறைப்படுத்தி, கோபத்தைத் தவிர்த்து வாழப்பழகுவோம்.



Dr. சி. சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை.

**1. யோகாசனப் பயிற்சி மூலம் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த அல்லது குணப்படுத்த முடியும் என்பது உண்மையா?...**

யோகாசனப் பயிற்சி செய்வதால், எமக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன. நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதிலும் இந்த யோகாசனப் பயிற்சி பங்களிக்கும். ஆனால், இது மட்டும் அந்த நோய்களைப் பூரணமாக கட்டுப்படுத்தாது. நீங்கள், மருத்துவ ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடுகளைப் பேணி மருந்துகளை ஒழுங்காக எடுத்து வந்தால் இந்த நோய்களைக் கட்டுப்படுத்துவது இலகுவாக இருக்கும். அதோடு இதனால் பல நன்மைகளும் கிடைக்கும். பொதுவாக, யோகாசனப் பயிற்சி செய்வதால் உடல் வலிமை அதிகரிக்கும். மனதில் விட்டுக் கொடுக்கும் தன்மை ஏற்படும்.


இதனால் பல பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இந்த யோகாசனப் பயிற்சி நாரிநோ, மூட்டு வலி போன்றவற்றை குறைப்பதற்கு உதவுவதோடு இதயம் சம்பந்தமான பிரச்சினைகளையும் குணப்படுத்துவதற்கு மருந்து மற்றும் உணவுக் கட்டுப்பாட்டுடன் யோகாசனப் பயிற்சியும் உதவுகிறது. அதோடு, பதற்றத்தைக் குறைத்து நல்ல நித்திரை வருவதற்கும் உதவியாக இருக்கும். அத்துடன் உங்களது தொழிற்பாடுகள், சிந்திக்கும் ஆற்றல், வலு என்பவற்றை அதிகரிப்பதோடு, மன அழுத்தத்தை குறைப்பதற்கும் உதவுகிறது. எனவே இந்த யோகாசனப் பயிற்சி, நீரிழிவு மற்றும் உயர் குருதி அமுக்கம் போன்ற தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த உதவும் எனினும் அதற்கு மருத்துவ ஆலோசனைப்படி நடத்தலும் அவசியம்.

த. பேரானந்தராசா,
பொது வைத்திய நிபுணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை, மன்னாரில் தீயணைப்பு பிரிவை நிறுவுங்கள்

# அமைச்சர்களிடம் ரவிகரன் எம்.பி கோரிக்கை



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தீயணைப்பு பிரிவை உடனடியாக நிறுவ நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன மற்றும் போக்கு வரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்க ஆகியோரிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கைக் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார்.

கடந்த 17.06.2025 அன்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில், முல்லைத் தீவு மற்றும், மன்னார் மாவட்டங்களில் தீயணைப்புப் பிரிவை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் உரை நிகழ்த்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் தீயணைப்புப் பிரிவை நிறுவ உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்களான சந்தன அபேரத்ன, விமல் ரத்நாயக்க ஆகியோரிடம் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கைக் கடிதங்களைக் கையளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8-299)

# அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க மத்திய அரசின் நிதி உதவி தேவை

## மன்னார் நகர சபை முதல்வர்



(மன்னார்)

மன்னார் நகரசபையின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க மத்திய அரசு நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்று மன்னார் நகர சபை முதல்வர் டானியல் வசந்தன் கோரிக்கை விடுத் துள்ளார்.

மன்னார் நகர சபையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

மன்னார் நகர மக்களின் நலன் கருதியும், நகரின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதும் முதற்கட்ட பணியாக அமையும். மன்னார் நகரில் கழிவுகளை அகற்றுதல், வடிகான்களை அமைத்தல், உள்ளக வீதி களை அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களை முதல் கட்டமாக முன்னெடுக்க உள்ளோம்.

கடமையைப் பொறுப் பேற்று நான்கு நாட்களில் பல்வேறு பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளேன். மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மன்னார் பொது விளையாட்டு மைதானம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. தற்போது குறித்த மைதானம் சீர் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் நகர சபைக்குச் சொந்தமான உள்ளக வீதிகள் புனரமைப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க உள்ளோம். வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்ற கிராமங்களுக்கான வடிகால் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளது. பழுதடைந்த நிலையில் உள்ள உள்ளக வீதிகள் சீர் செய்யப்பட உள்ளது.

தரவன் கோட்டை, கீரி வரையிலான பாதை பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. அந்தப் பாதையை சீர் செய்ய 55 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பாதைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன்னார் பிரதான பாலத்திற்கு அருகில் காணப்படும் நிலப்பரப்பில் உல்லாசப் பயணிகளை ஈர்ப்பதற்காக முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டத்திற்கு 16 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் நகரசபைக்கான வளங்கள் பற்றாக் குறையாக உள்ளது. ஜே.சி.பி., உழவு இயந்திரம், ஏனைய வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

எனவே மத்திய அரசிடம் கோரிக்கை ஒன்றை முன் வைக்கிறேன். பின்தங்கிய மாவட்டமாக உள்ள மன்னார் நகரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால் மத்திய அரசின் உதவி எமக்கு தேவை என்றார். (8-285)

## புதிய அங்கத்தவர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)


சுதந்திர மனித உரிமைகள் அமைப் பின் புதிய அங்கத் தவர் ஒன்று கூடல் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கியூ டெக் கரித்தாஸ் மண்டபத்தில் வட மாகாண தலைவர் Dr.R.M புண்ணியமூர்த்தி தலைமையில் இடம் பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# மரண அறிவித்தல்

## வைரவிப்பிள்ளை கமலதாசன்

**மின்பொறியியலாளர்**

(முன்னாள் உதவிப்பணிப்பாளர் - வவுனியா இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை. முன்னாள் பகுதிநேர விரிவுரையாளர் - வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி.)



மலர்வு-10.09.1965

உதிர்வு - 27.06.2025

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியை பிறப்பிடமாகவும், வவுனியா வெளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை கமலதாசன் அவர்கள் (27.06.2025) கடந்த வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையர்) - இராஜசோதி தம்பதியினரின் அன்பு மருமகனும், நந்தினி (பட்டயப் பொறியியலாளர்) அவர்களது பாசமிகு கணவரும், ரஞ்சனி (கட்டடக் கலைஞர்) அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற உமாகாந்தன், திருமதி உமா மகேஸ்வரி அருள்நாயகம், மனோகரி, காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னத்தம்பி அருள்நாயகம், ரதிவாணி உதயகுமார், காலஞ்சென்ற குமுதினி சந்திரகாந்தன் (ஓய்வுநிலை அதிபர் - விவசாயக் கல்லூரி வவுனியா), மாதினி (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - ஏறாவூர் நகரசபை), ராஜ் குமார்(ஆசிரியர் - மட்டக்களப்பு), சிவகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பருத்தித்துறை பிரதேசசபை), சந்திரகாந்தன்(முன்னாள் நிறைவேற்றுப் பொறியியலாளர்-வவுனியா), காலஞ்சென்ற அன்ரன்(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்- ஏறாவூர் நகரசபை), ரஞ்சினி (ஆசிரியை - வந்தாரமுல்லை), காலஞ்செற்ற சுஜந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் யசோதர் (Software Architect), ஹரிதரன் (Save the children - Batticaloa), அகல்யா சுரேஸ் (Deakin University - Australia), ஹரிசயன், ஹரினிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், பவந்தினி (கனடா), அனந்த சயன் (கனடா), நிவாணா ஆகியோரின் அன்பு பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2025) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

679/20 I, ஹொறவப்பொத்தானை வீதி,
வெளிக்குளம், வவுனியா.

தகவல்
குடும்பத்தினர்.
077 331 6743

## சான்றிதழ் வழங்கலும் மரம் நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் சான்றிதழ் வழங்கலும் மரம் நாட்டலும் எதிர் வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் யா/கனகரெட்ணம் ம.ம. வித்தியாலயத்தில் அதிபர் அ. ஆனந்தராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக Dr.T. கபில R.பெர்னான்டோ (Director General FHRO) கலந்து கொள்ளவுள்ளார். (8)

# 2 ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர்.

## நல்லநாதன் மகாலட்சுமி

மலர்வு- 1967.08.21

உதிர்வு-2023.06.29

இல.39 அன்னா நகர்,
வசந்தன் குடியிருப்பு, வவுனியா

என்றும் உங்கள் நினைவுகளுடன்
- பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப் புதைகுழிகள் மனிதப் பேரவலத்தின் உச்சம்



## செந்தமிழன் சீமான் சீற்றம்

(சென்னை)

செம்மணி மனிதப் புதைகுழிகள் மனிதப்பேரவலத்தின் உச்சம். சிங்கள இனவெறியர்களின் தமிழின அழிப்புக்கான மற்றுமொரு வரலாற்றுச் சான்று.

உலக நாடுகள் இப்போதாவது மௌனம் கலைக்குமா? உரிய நீதியைப் பெற்றுத் தருமா? என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செ.சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் அருகே அரியாலை - சித்துப்பாத்தி பகுதியிலிருந்த புதைகுழியிலிருந்து சிறு குழந்தை உட்படக் கொல்லப்பட்ட தமிழர் உடல்களின் எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்டது உலகத் தமிழர்களிடம் மிகப்பெரும் அதிர்வினை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து ஈழத்தாயக மக்கள் முன்னெடுத்த 'அணையா விளக்கு' தொடர்போராட்டத்தின் விளைவாக, யாழ்ப்பாணத் துக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், செம்மணி - சித்துப்பாத்தி மனித புதைகுழிகளை நேரில் கண்டு விசாரணை மேற்கொண்டது தமிழ் மக்களிடையே புதிய நம்பிக்கையைத் துளிர்விடச் செய்கிறது.

செம்மணி மனித புதைகுழிகள் என்பது இனவெறி இலங்கை அரசு மேற்கொண்ட கடலளவு தமிழ் இனப் படுகொலைகளில் ஒரு சிறு துளி மட்டுமே; செம்மணி போன்ற ஏராளமான மனித புதைகுழிகள் ஈழத்தாயகம் முழுவதும் விரவிக்கிடக்கின்றன. அவற்றையெல்லாம் தோண்டி எடுத்து முழுமையாக விசாரித்தால் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் எத்தனை பெரிய இனப்படு கொலையை தமிழர்கள் மீது இனவெறி இலங்கை அரசு நிகழ்த்தி வந்திருக்கிறது என்பதை உலக மானிட சமூகம் அறிய முடியும்.

இலங்கை அரசால் பல்வேறு காலகட்டங்களில், மறைமுகமாகக் கொன்று புதைக்கப்பட்ட பல்லாயிரம் தமிழர்கள் குறித்தும், அப்படு கொலைகளை நிகழ்த்தியவர்கள் குறித்தும் முறையான நீதி விசாரணைக்கு ஒருபோதும் அனுமதியோ, ஒத்துழைப்போ வழங்கப்படுவதில்லை.

ஆகவே, செம்மணி உட்பட ஈழத்தாயகத்தில் மறைக்கப்பட்டுள்ள அனைத்து மனிதப்புதைகுழிகள் குறித்து பன்னாட்டு சுதந்திர விசாரணை நடத்தத் தேவையான பொறிமுறையை உருவாக்கி, புதைகுழிகளை அகழாய்வு செய்து, இனப்படு கொலை குறித்த விசாரணையை அறிவியல் பூர்வமாக மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டுமென்று ஐ.நா. அவையின் மனித உரிமை ஆணையத்தை வலியுறுத்துகிறேன்.

அதன் மூலம் மட்டுமே இலங்கை அரசின் சிங்கள இனவெறி எந்த அளவிற்கு உச்சத்தில் இருந்துள்ளது என்பதையும், 2009 ஆம் ஆண்டிற்கு முன்பே தொடர்ச்சியாக, மிகக்கொடூரமாக ஈவு இரக்கமின்றி தமிழர்கள் இலங்கை ஆட்சியாளர்களால் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் உலக நாடுகள் அறிந்துகொள்வதற்கான மறுக்க முடியாத வரலாற்றுச் சான்றாக அவை அமையும்.

தமிழர்களுக்கான தனித்த இறையாண்மை கொண்ட தமிழீழத் தாயகம் அமைவது ஒன்றே நிலைத்த, சரியான தீர்வாக இருக்க முடியும் என்பதை உலகம் உணர்ந்து கொள்ளவும், ஆதரவளிக்கவும் செம்மணி புதைகுழிகள் குறித்த விசாரணை மிக முக்கிய தொடக்கப் புள்ளியாக அமையும் என்பதையும் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈழத்தாயகத்தில் நடைபெறும் நீதிக்கான தொடர் போராட்டங்களுக்கு ஆதரவாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவரும் உணர்வுப்பூர்வமாக இணைந்து நிற்கின்றோம்.

எங்களைக் கொன்று மண்ணில் புதைத்தாய்! - எங்கள் மண்ணைக் கொண்டு போய் எங்கே புதைப்பாய்? இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார். (நி)

## ஈரானுடன் நடந்த போரில் 12 பில்லியன் டொலர் சேதம்

### இஸ்ரேல் மதிப்பீடு

(ஜெருசலேம்)

ஈரானுடன் நடந்த 12 நாள் போரில் இஸ்ரேலுக்கு சுமார் 12 பில்லியன் டொலர் அளவுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையேயான தாக்குதலில் இஸ்ரேலின் முக்கிய நகரங்கள் கடும் சேதமடைந்ததுடன் குறிப்பாக இஸ்ரேலின் வான் பாதுகாப்பை மீறி ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.



இந்நிலையில், ஈரான் தாக்குதலில் இஸ்ரேலுக்கு சுமார் 12 பில்லியன் டொலர் மதிப்புக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் வரித்துறை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், நாடு தற்போது மிகப்பெரிய சவாலை சந்தித்து வருகிறது. இஸ்ரேலின் வரலாற்றில் இதுபோன்ற சேதத்தை நாடு இதுவரை சந்தித்ததில்லை.

ஈரான் தாக்குதலில் சேதமடைந்த கட்டடங்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் 12 பில்லியன் டொலர் மதிப்பில் சேதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் சேதமடைந்த இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பு மற்றும் ஆயுதங்களை கணக்கெடுத்தால் சேத மதிப்பு கூடுதலாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## சோகமாக மாறிய சுற்றுலா!




(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆற்று வெள்ளத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 18 பேர் அடித்துச் செல்லப்பட்டனர்.

இதில் 7 பேர் சடலமாக மீட்கப்பட்டு உள்ளனர். மீதமுள்ளவர்களை தேடும் பணி நடக்கிறது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதி சுற்றுலா தலமாக விளங்குகிறது. இதற்காக இங்கு ஏராளமானோர் வருகின்றனர். அந்த வகையில், ஸ்வாட் ஆறு அருகே சியால்கோட் பகுதியைச் சேர்ந்த 18 பேர் இங்கு சுற்றுலாவுக்கு வந்தனர். அப்போது, ஆற்றில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. 18 பேரும் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்களில் 7 பேர் உடல் மீட்கப்பட்டுள்ள நிலையில், மற்றவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

உயிர் பிழைத்த ஒருவர் கூறியதாவது, நாங்கள் காலை உணவு சாப்பிட்டுவிட்டு தேநீர் அருந்திக் கொண்டிருந்தோம், குழந்தைகள் ஆற்றின் அருகே செல்பி எடுக்கச் சென்றனர். திடீரென ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது எனத் தெரிவித்தார்.

## உக்ரைன்-ரஷ்யா இடையே கைதிகள் பரிமாற்றம்

(கீவ்)

உக்ரைன் - ரஷ்யா இடையே மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இராஜதந்திர முயற்சிகள் இருந்தபோதிலும் ரஷ்யாவும் உக்ரைனும் மேலும் பல போர்க் கைதிகளை பரிமாறிக்கொண்டுள்ளன.

மொஸ்கோ மற்றும் கீவில் உள்ள அதிகாரிகள் பரிமாற்றத்தை உறுதிப்படுத்தினர்.

இருப்பினும் விடுவிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை தொடர்பில் தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, ஆயுதப் படைகள், தேசிய காவலர் மற்றும் மாநில எல்லைக் காவல்படையின் வீரர்கள் வீடு திரும்புவதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி



அவரது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலானோர் 2022 முதல் சிறைபிடிக்கப்பட்டவர்கள் எனவும் ஒவ்வொரு நபரையும் கண்டுபிடிக்க, ஒவ்வொரு பெயரிலும் உள்ள தகவல்களைச் சரிபார்க்க நாங்கள் எல்லாவற்றையும் செய்து வருகிறோம், எனவும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரத்தில், மற்றொரு ரஷ்ய வீரர்கள் குழு உக்ரைனில் இருந்து திரும்பிய தாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சரகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். – அரிஸ்ரோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச திணைக்களங்களை உச்சமாக வலுவூட்டுங்கள்

வட மாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள் தொடர்பில் முக்கியமான மூன்று கருத்துக்களை முன்வைக்க முடியும்.

அதில் ஒன்று, திறமையாகச் செயற்படுகின்ற அரச நிறுவனங்கள்.

இரண்டாவது, தேவைக்கேற்ற சேவையை திருப்தியாக வழங்காத நிறுவனங்கள்.

மூன்றாவது, எந்தப் பிரயோசனமும் இல்லாத திணைக்களங்கள் என மூன்று வகைமைக்குள் வட மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களை வகைப்படுத்த முடியும்.

இதில் முதலாவது நிறுவனம் பற்றி நாம் பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை.

மாறாக, சேவையை நிறைவாக வழங்காத நிறுவனங்கள் மற்றும் பயனற்ற நிறுவனங்கள் தொடர்பிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இதில் அரைகுறையாகச் சேவை வழங்குகின்ற நிறுவனங்களால் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

தவிர, ஒரு சேவையைப் பெறுவதற்காகப் பொதுமக்கள் நாள்தோறும் அலைகின்றனர்.

எனினும் குறிப்பிட்ட வேலையைச் செய்து கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் தயாராக இல்லை.

அவரைப் பொறுத்தவரை தனது அரச சேவை என்பது தனக்கு ஊதியம் வழங்குவதற்கானது என்ற நினைப்பைக் கொண்டதாகும்.

பொதுவில் குறித்த அரச திணைக்களம் உச்சமாகச் சேவையை வழங்கினாலும் ஒரு சில உத்தியோகத்தர்களின் தாமத குணத்தால், அந்த நிறுவனத்தின் சேவை களங்கப்படுகிறது.

எனவே குறித்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்போதுதான் மக்கள் நிறைவான சேவையைப் பெற முடியும்.

இதுபோல வட மாகாணத்தில் இயங்குகின்ற சில அரச திணைக்களங்களில் என்ன நடக்கிறது என்பதையே அறிய முடிவதில்லை.

பொதுவில் அந்த நிறுவனங்களில் பதில் அளிப்பவர்களாகச் சிற்றூழியர்களே உள்ளனர்.

அவர்கள் பொதுமக்களை, வராமல் தடுப்பதையே சிறந்த உபாயமாகக் கடைப்பிடிக்கின்றனர்.

இதன் காரணமாக பொதுமக்களை குறித்த அரச திணைக்களங்கள் சரியான முறையில் வழிப்படுத்துவதில்லை.

தவிர, இத்தகைய நிறுவனங்களில் அதன் பொறுப்புவாய்ந்த அதிகாரி தனது கடமையைத் தட்டிக்கழிப்பதன் காரணமாக, ஏனைய பணியாளர்கள் பொதுமக்களுடன் மரியாதைக்குறைவாகக் கதைக்கின்ற சூழ்நிலையும் ஏற்படுகிறது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களை வலுவூட்டுவதற்கான திட்டங்களை சம்பந்தப்பட்ட தலைமைக் காரியாலயங்கள் மேற்கொள்ள வேண்டும்.

# தேர்தலின் போது தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறவாது நிறைவேற்றுங்கள்

## அநுர அரசாங்கத்துக்கு நினைவூட்டினார் பேராசிரியர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

அநுர அரசாங்கம் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விடக்கூடாது. சட்டத்தின் பிரகாரம் அவற்றினை உடன் நிறைவேற்ற வேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு இந்த அரசாங்கம் முன்னேற்றகரமான எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அதேபோன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் இரத்துச் செய்வதற்கு வெளிப்படையான தீர்மானங்கள் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

பெரும்பான்மை மக்கள் மத்தியில் மாகாண சபை முறைமை குறித்து தவறான நிலைப்பாடே ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் நாட்டில் புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தியது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மாகாண சபை முறைமைக்கு ஆரம்பம் முதலே எதிராகவே மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டது. இவ்வாறான பின்னணியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இந்த அரசாங்கத்துக்கு பாரிய தொரு பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. இந்நிலையில், மாகாண சபைத் தேர்தலை இந்த அரசாங்கம் விரைவாக நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வதாக அரசாங்கம் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டது. ஆனால் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்டம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்றுவதாக குறிப்பிடுவது முறையற்றது.

நாட்டு மக்களுக்கு சிங்கள மொழியில் ஒன்றைக் குறிப்பிட்டு விட்டு, சர்வதேசத்துக்கு ஆங்கில மொழியில் பிறிதொன்றைக் குறிப்பிட்டு காலத்தைக் கடத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றார். (ம-7)

### கொழும்பு இராணுவத் தலைமையகம் வழிசமைத்தாலே

# பலாலி இராஜேஸ்வரியை பொதுமக்கள் சுதந்திரமாக வழிபட இராணுவம் வழிவிடுமாம்

### செவ்வாய்க்குள் தீர்வு கிட்டும் என்கிறார் இளங்குமரன் எம்.பி

பலாலி இராஜராஜேஸ்வரி அம்மனை பொது மக்கள் சுதந்திரமாக வழிபட நேற்று முன்தினம் வேலியகற்றி வழிவிட்ட இராணுவம் நேற்று மீண்டும் வேலியிட்டு பொதுமக்களின் வழிபாட்டுரிமையை தடுத்திருந்தது.

இந்நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆளுங்கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்,

குறித்த ஆலயத்தினை பொதுமக்கள் வழிபடுவதற்காக விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதியும் இதனை நல்லிணக்க சமிக்ஞையாகக் கருதி விடுவிப்புக்கு இணங்கியிருந்தார்.

இதனையடுத்து பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் வழிபாடுகளுக்காக விடுவிக்கப்பட்டதுடன் அங்கு பொதுமக்கள் சுதந்திரமாக வழிபாடாற்றவும் நித்திய பூசைகளை மேற்கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீளவும் தடை ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் இராணுவத்தினரிடம் வினவிய போது கொழும்பு இராணுவத் தலைமையகத்திலிருந்து உத்தியோகபூர்வமான எழுத்து மூல அனுமதி இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள் அவ் அனுமதி கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின் பொதுமக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபாடாற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்றார். (ம-7,33)

# பொதுப் போக்குவரத்துச் சேவையை மேலும் வலுப்படுத்தத் திட்டம்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதற்காகச் செயற்படுத்தப்படும் திட்டத்தில் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவதில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற 'Dream Destination' 100 ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் ஆரம்பவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

தனிப்பட்ட அதிகார வர்க்கத்தினர் தங்கள் விருப்பப்படி போக்குவரத்துச் சட்டங்களை செயற்படுத்த அனுமதிக்கப்படாது. வலுவான போக்குவரத்துச் சட்ட முறையை அறிமுகப்படுத்தி செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

தினமும் சுமார் எட்டு பேர் வீதி விபத்துகளில் உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்துகின்றன. வலுவான போக்குவரத்துச் சட்ட கட்டமைப்பின் ஊடாக வீதி விபத்துக்களைத் தடுக்கவும், போக்குவரத்து நெரிசலைத் தடுக்கவும், நச்சு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், வாகன இறக்குமதிக்காக செலவிடும் அரசாங்கத்தின் பாரிய செலவைக் குறைக்கவும் உதவும் என்றார். (ம-7)

# சொகுசு காரில் போதைவஸ்து சூட்சும விற்பனை முறியடிப்பு

யாழிலிருந்து முல்லைத்தீவிற்கு சொகுசு காரில் போதைவஸ்து விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் நேற்று குறித்த சூட்சும விற்பனை முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் இளவாலையைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனும் யுவதியும் கைது செய்யப்பட்டனர். (ம-7,299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


## மீசாலை கிழக்கில்

### காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**077 654 4540**

(சி-182) (தரகர் தேவையில்லை)



## லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1235)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

**077 839 3974**



## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர். மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம். கைரேகை. எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை. புதிய தொழில் தொடங்க. திரு மணத்தடை.வாழ்வில் தோல்வி. குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை. கல்வியில் தடை. குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.**139,** Main Street Jaffna.

**யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்**

**(முன்பதிவு செய்து வரவும்)**

(4598)


UNIVERSITY COLLEGE OF JAFFNA

UoVT

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

### University of Vocational Technology

Ministry of Education,Higher Education & Vocational Education

**Applications are open for the following Diploma / Higher National Diploma**

1. Building Services Technology
2. Construction Technology
3. Cosmetology
4. Farm Machinery Technology
5. Food Technology
6. Hospitality Management
7. Information and Communication Technology
8. Mechatronics Technology
9. Production Technology

Closing Date 21st July 2025

Accreditation QMS TVEC Approved Registration

Bursary for eligible Students

*Entry Qualifications: GCE A/L Qualified or NVQ 4*

**Career Path:**

A/L or NVQ 4 → University College: NVQ 5 / Diploma → NVQ 6 / HND → NVQ 7 / Degree

**For more details please visit:**

* Website : www.ucj.ac.lk
* Telephone : 021-221-7791
* Fill the google form and attach the required documents
* Please pay the Application fee Rs.1000 to the Account No. (Peoples Bank 162-100100045947) and upload the scanned copy of the bank receipt with the online application

(c-3289)

Accepting online applications only

सत्यमेव जयते

# Consulate General of India Jaffna

The Consulate General of India, Jaffna is looking for a suitable candidate for filling up **one (1)** vacancy of the post of **"Librarian". Only Sri Lankan Nationals** of age limit **35 Years** with minimum ***Graduation level*** qualification can apply. Details of the vacancy and the application form are available on Consulate's https:// **www.cgijaffna.gov.in web site**

Interested candidates are requested to download the application form and submit the completed form by Post or in person to **Head of Chancery, Consulate General of India, at 14, Maruthady Lane, Nallur, Jaffna by 12 July, 2025.**

(c-3287)

सत्यमेव जयते

# Consulate General of India Jaffna

Consulate General of India, Jaffna invites tenders from reputed and experienced housekeeping or cleaning service providers, registered in Sri Lanka for **providing housekeeping/cleaning services** for its office located at 14, Maruthady Lane, Nallur, Jaffna. Details of the notice inviting tender can be obtained from the following websites:

https:/www.cgijaffna.gov.in

https:/eprocure.gov.in/epublish/app

The bids can be submitted upto **13 th July, 2025** at **1700 hrs**. For any clarification, please write to hoc.jaffna@mea.gov.in or call at 021-2220505, 504.

(c-3283)

# இராசிபலன்

29.06.2025
ஆனி 15, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 12.55 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 10.22 மணிவரை

சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26-5.56 மணிவரை
ஸகந்த பஞ்சம், மணிவாசகர் குருபூசை

சந்திராஷ்டமம்- பூராடம், உத்தராடம்

வளவன்

**மேஷம்** பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாடு திருப்தி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், இயல்பான வாழ்வில் இன்பங்கள் கூடும் நாள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், தேக நலனில் கவனம் எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உற்சாகமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, சுப விரயங்கள் கூடும் நாள்.

**தனுசு** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்

**உன் பெயர் தான் வியாபாரம் அதை உயிர் போல் காப்பாற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை...

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டுதலில் உபபொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ம-7,30)

## காணாமல்...

உயிரிழந்த நிலையில் சடலமாகக் கரையொதுங்கியுள்ளார்.

குறித்த நபர் மணற்காட்டில் இருந்து கடந்த வியாழக்கிழமை அதிகாலை கட்டுமரத்தில் தொழிலுக்காகக் கடலுக்குச் சென்றுள்ளார். கடலுக்குச் சென்றவர் வழமையாக காலை 9 மணியளவில் கரை திரும்பிவிடுவார்.

ஆனால் அவர் கரை திரும்பாததால், சக தொழிலாளிகள் அவரைத் தேடிக் கடலுக்குச் சென்றவேளை, கடலில் அவரது கட்டுமரம் மாத்திரம் மிதந்த வண்ணம் காணப்பட்டுள்ளது.

அதனை மீட்டு கரை சேர்த்த தொழிலாளிகள் அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்றுச் சனிக்கிழமை அவரது சடலம் கரையொதுங்கியுள்ளது.

அதேவேளை சட்டவிரோத கடலட்டை தொழில் செய்பவர்களின் படகு கட்டுமரத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்தியிருக்கலாம் என அப்பகுதி கடற்தொழிலாளர்கள் சந்தேகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,60)

## கிணற்றில்...

ததாகும்.

குழந்தை கிணற்றில் விழுந்த நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## விசேட...

வுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, குறித்த பாராளுமன்ற அமர்விற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

எனினும் அன்றைய தினம் நடைபெறவுள்ள பாராளுமன்றச் செயற்பாடுகள் குறித்த நிகழ்ச்சி நிரல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

அதேநேரம் குறித்த விசேட பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)

## முல்லையைச்...

தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக ஊடுருவ முயன்ற முல்லைத்தீவைச் சேர்ந்த மூவர் தனுஷ்கோடி அருகில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து தனுஷ்கோடி முதல் சர்வதேச கடல் எல்லை வரை உள்ள மணல் திட்டுப் பகுதிகளில் இந்தியக் கடலோரக் காவல்படைக்குச் சொந்தமான ஹோவர் கிராப்ட் ரோந்துக் கப்பலில் படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது தனுஷ்கோடி அடுத்த நான்காம் மணல் திட்டில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற மூன்று பேரையும் சோதனை செய்ததில் அவர்களிடம் டெபிட் கார்ட், கிரெடிட் கார்ட் மற்றும் இலங்கை பணம் 46,000 உள்ளிட்டவைகள் இருந்தன.

இதன்போது மூவரையும் கைது செய்த இந்தியக் கடலோரக் காவல் படையினர் தனுஷ்கோடி அரிச்சல் முனைக் கடற்கரைக்கு அழைத்து வந்து மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணையில் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 34, 43 மற்றும் 33 வயதுடைய மூவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்திற்குள் ஊடுருவிய பின் அவர்கள் மூவரும் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பிச்செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்துள்ளது. (ம-7,104)

## பலாலி...

தினம் வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் அனுமதித்திருந்த நிலையில் நேற்றுச் சனிக்கிழமை மீள ஆலயத்திற்குச் செல்ல அனுமதி மறுத்துள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி பலாலியில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டது.

கடந்த 35 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள ஆலயத்திற்குக் கடந்த 06 மாத காலத்திற்கு முதலே சுதந்திரமாகச் சென்று வழிபட அனுமதி வழங்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்திருந்த போதிலும், இதுவரை காலமும் கடுமையான கட்டுப்பாடுகளுடன், விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்திற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆலயத்திற்கு மாத்திரம் செல்வதற்கு என உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பிரத்தியேக பாதை அமைக்கப்பட்டு, குறித்த பாதை ஊடாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் மக்கள் ஆலயத்திற்கு மாத்திரம் சென்று வழிபட்டு திரும்ப இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுச் சனிக்கிழமை ஆலயத்திற்குச் செல்லும் பிரத்தியேகப் பாதையை இராணுவத்தினர் மூடி முட்கம்பி வேலி அமைத்திருந்ததுடன், இரு இராணுவத்தினர் கடமையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆலயத்திற்கு நேற்றுச் சனிக்கிழமை வழிபடச் சென்ற மக்கள் இராணுவத்தினர் ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்காததால் முட்கம்பி முன்பாக தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி பூப்போட்டு வழிபட்டனர். (ம-7,33)

## மேலும்...

டாம் கட்ட அகழ்வுப் பணியின் மூன்றாம் நாள் பணிகள் நேற்றுச் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது மூன்று மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் 27 மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 22 எலும்புக் கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, செய்மதிப் படங்கள் ஊடாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அப்பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் மனிதப் புதைகுழி காணப்படும் இடத்தில் உள்ள மண்ணை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அகழ்வுப் பணிகளுக்கான செலவினப் பாதீடாக 12 மில்லியன் வழங்கப்பட்ட போதிலும், அதற்கு அண்மித்த தொகையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் உயர்கல்விக்கான சரியான ஆரம்பம்



கனடா | அவுஸ்திரேலியா | நியூசிலாந்து | அமெரிக்கா

- படிப்பு முடிந்தவுடன் வேலைவாய்ப்பு
- பகுதிநேர வேலைவாய்ப்புக்கள்
- சரியான வழிகாட்டுதலுடன் உங்களுக்கேற்ற உயர்கல்வி தேர்வு
- ஆலோசனை வழங்க சிறந்த துறை நிபுணர்கள்

(1272)

0777 59 2311



## Professional English

வார இறுதி/மாலை நேர வகுப்புக்கள்

அரச/ தனியார் மற்றும் வங்கி அதிகாரிகள்/ வேலையாட்களிற்கு மிகவும் உகந்தது.

- Speaking Skills
- Email letter writing Skills
- Business writing : Letters/ Memoetc
- Corporate/ Telephone Etiquette

(1271)

பதிவுகளுக்கும் விபரங்களுக்கும்

076 897 6665, 077 386 7695

APSS No.188, K.K.S Road, CHUNNAKAM.



## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரில் நல்ல சூழலில் சிறு குடும்பம் ஒன்றிற்கு 2/3 அறை கொண்ட வீடு வாடகைக்கு தேவை.

077 473 7737
075 613 1653

(C-181)



## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Discount to all the Courses

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(4655)

T.P : 077 780 3970, 074 007 1970



## மணப்பெண் தேவை

1. காரைநகர் – பருத்தித்துறை, இந்து 1988 புனர்பூசம், M.Sc UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
2. காரைநகர், இந்து, 1990, ஆயிலியம் Computer Science, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் மணப்பெண் தேவை. (28386)
3. புங்குடுதீவு, இந்து 1989, சுவாதி Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32178)
4. காரைநகர், இந்து 1992, பூரட்டாதி, Civil Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32827)
5. நெல்லியடி, இந்து, 1991, பூராடம், Graduate, USA Citizen Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (47452)
6. கொக்குவில் – இணுவில், இந்து 1988, திருவோணம் Civil Engineer, Austraila Citizen Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52796)
7. அளவட்டி, இந்து 1989, உத்திராடம் M.Sc in Engineering, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53552)
8. திருநெல்வேலி – சாவகச்சேரி, இந்து, 1992, கார்த்திகை B.Sc (Hons) in IT, UK Citizinen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
9. கோண்டாவில், இந்து, 1990, அத்தம், Graduate, UK மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (38579)
10. Jaffna Town, இந்து, 1991, கார்த்திகை, Masters of Accounting and finance, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (43419)

எம்மிடம் எல்லா நாட்டிலும் unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு.

www.thaale.com
S.Sharma J.P (1275)
Phone & Whatsapp 077 539 3728



## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் பரமேஸ்வரா சந்தியில் புதிய வீட்டில் 2ம் மாடி 4 அறைகள் + AC சகல நவீன வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. வைத்தியர்கள் / விரிவுரையாளர்கள் விரும்பத்தக்கது. தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்.

(4648)

077 974 1382



## JOB FAIR

DEWMAS

வேலைவாய்ப்பு முகாம் 2025

150 + Jobs 30 + Companies



இடம் :- யாழ் இந்துக் கல்லூரி (குமாரசாமி மண்டபம்)

காலம் :- 05.07.2025 (சனிக்கிழமை)

நேரம் :- காலை 8:30 தொடக்கம் மாலை 5 மணி வரை

0740833368 / 0777733368
0760984532

(4656)

மேலதிக வேலைவாய்ப்பு விபரங்களை அறிந்து கொள்ள dewmasweb.com ஐ பார்வையிடவும்



## வேலையாட்கள் தேவை

### SVIS Construction

1. Quantity Surveyor
2. Engineer
3. Technical Officer (TO)
4. Accountant

077 245 4224
077 211 0996

(1270)



## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரிலிருந்து 2 Km தூரத்தில் நுணாவில் - கல்வயல் வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் எடுத்துக் கொள்ளலாம்)

(4662)

தொடர்புகளுக்கு :

077 32 55 474



## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட A9 வீதி நுணாவில் பகுதியில் இருந்து பருத்தித்துறை வீதியில் 1 Km தூரத்தில் உள்ள தாழையடி துர்க்கை அம்மன் வீதியில் 100m தூரத்தில் உள்ள தென்னங்காணி 18 பரப்பு மொத்தமாக விற்பனைக்கு உண்டு.

(C-3230)

077 36 21 694, 077 31 54 188, 077 69 34 810



## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியில் கொய்யாத் தோட்டம் புது வீதி சந்தியில், மாதா சொரூபம் அமைந்துள்ளதை அடுத்துள்ள ஆதனம் நெற்பரப்பு 2ம் 11.74 குளியும் அளவுடைய (2 பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

(4646)

தொடர்பு : CANE-SRI LANKA (புற்றுநோயாளர் காப்பகம்)
இல.5, சபாபதிபிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.

021 224 0258, 077 077 2759

வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.



## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கும் பிள்ளை பராமரிப்பதற்கும் பணிப்பெண் தேவை. வயது 35 இற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(4673)

தொடர்புகளுக்கு :

077 258 5564



## நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!

எழுதுமட்டுவாழ் நகரில்

Premium Lands with 100% Legal Security

8 இலட்சம் முதல்

* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.



விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!

- முல்லை – எழுதுமட்டுவாழ்
- மருதம் – கிழக்கு அரியாலை
- குறிஞ்சி – மலையகம் (ஹப்புத்தளை நகர்)
- நெய்தல் – மட்டக்களப்பு (வாவிக் கரையோரம்)

இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!

இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் +94 77 743 5557

இனிமையான வாழ்விற்கு...! GOODGIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD.

(C-3292)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-3293)



## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3960/- |
| 11-16 Kg | 2790/- |
| 21-30 Kg | 2650/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 254/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 399/= |
| 1Kg றவை | - 290/= |
| 1Kg சர்க்கரை | - 265/= |
| 1Kg ஈக்குத்தீட்டல் பச்சை | - 215/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 240/= |
| 10Kg விஜிதா | - 2800/= |
| 1Kg மல்லி (M) | - 355/= |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 759/= |
| 1Kg சிவப்பு கௌபி | - 890/= |
| 1Kg கடலை | - 385/= |
| 1Kg சோயா | - 350/= |
| 400g விம் கட்டி | - 250/= ~~265/=~~ |

400g Anchor 1045/= ~~1100/=~~ Max 02

1Kg சன்லைட் பவுடர் 280/= ~~326/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1274)

Happy Supermarket 0777 8080 30


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.